304

# ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol. 2. OCTOBER 1934. No. 2.



மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர் : சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்பிரம்மணியசாஸ்திரிகள்.
மதுரை (S. I.)

தனிப்பிரதி விலை அணா 2. Copy Right.

கடவுள் துணை.

# ஸன்மார்க்க  ப்ரதர்சினீ.

## தமிழ் மாதாந்திரப் பத்திரிகை.

श्रीकान्तो मातुलो यस्य जननी सर्वमङ्गला।
जनकः शङ्करो देवः तं वन्दे कुञ्जराननम् ॥


| மாலை 2. | மதுரை 1934-ளு அக்டோபர்-மீ 1-உ | மலர் 2. |
|---|---|---|


பொருளடக்கம்.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமத் பகவத்கீதை | 4 |
| 2. | ஸ்ரீமத் பாகவதம் | 10 |
| 3. | ஸ்ரீமத் ராமாயணம் | 8 |
| 4. | ப்ரம்மவித்யா | 6 |
| 5. | ஸுதர்சனன் ஓர் வரப்ரஸாதி | 12 |



ஆசிரியர்:—

சாஸ்த்ர ரத்னம், ப்ரம்மஸ்ரீ தேதியூர்,

**ஸுப்ரமண்ய சாஸ்த்ரியள்,**

மதுரை.

**Manians Best Kalnar Tooth Powder.**

**கல்நார் தந்த சுத்தி சூர்ணம்.**

இந்த சூர்ணமானது வைத்திய சாஸ்திரப் பிரகாரம் அநேக மூலிகைகளாலும், வேர்வகைகளாலும், நானாவித பட்டைகளாலும், இன்னும் பற்களுக்கு உருதிகொடுக்கும் படியான சிலகல்நார் வகையறாவினாலும் செய்யப்பட்டுள்ளது இதை உபயோகித்து வந்தால், பல்வலி, பல்ஈரல், பல் லரணை, பல் அசைவு, பல்கூச்சம், முதலிய பற்களைச் சேர்ந்த சகல வியாதிகளையும் கண்டிக்கும். பல்வலி உடனே நிற்கும்.

பாக்கட் 1க்கு
**0—1—6**

**R. S. Manian,**
Ammangudi,
Jeeyapuram, S. I. Ry.

# ஜோதிஷம்!

ஜாதக நகலும் ஆண், பெண், இவைகளை எழுதியனுப்பினால் ஜாதகரிட குணம், தனஸம் பாதனை, வித்யை, பூமி ஸந்தனம், சத்ரு, ரோகம், கடன், களத்திரம், ஆயுள், தொழில், லாபம், விரயம் இப்படி 23 விஷயங்களை எழுதி **V. P.** சிலவுட்பட ரூ 1–6–0-க்கு அனுப்பப் படும். ஒரு தசைக்கு 9-புக்தி பலன் எழுத ரூ 2.

ஸ்ரீ கிருஷ்ண விலாச ஜோதிஷ சாலை
மோகனூர், கரூர், *S. I. Ry.*

உ

# பகவத்கீதை.

जगत्प्रतिष्ठा देवर्षे पृथिव्यप्सु प्रलीयते । आपस्तेजसि लीयन्ते तेजोवायौ प्रलीयते ॥ वायुः प्रलीयते व्योम्नि व्योमाव्यक्ते प्रलीयते ।

(ஜகத்ப்ரதிஷ்டா தேவர்ஷே ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே। ஆபஸ் தேஜஸி லீயந்தே தேஜோவாயௌ ப்ரலீயதே॥ வாயு: ப்ரலீயதே வ்யோம்நி வ்யோம அவ்யக்தே ப்ரலீயதே ।)

என்ற வசன பலத்தால் ப்ருதிவி என்ற பூதமானது ஜலத்திலும், ஜலமானது அக்னியிலும், அக்னியானது வாயுவிலும், வாயுவானது ஆகாசத்திலும், ஆகாசமானது மாயையிலும், ப்ரளய காலத்தில் லயத்தை அடைகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலும், ஆகாசத்திற்கு ப்ரளய காலத்தில் நாசமுண்டு என்றறியவும். ஆகையால் ஆகாசம் முதலான ஐந்து த்ரவ்யங்களை நித்ய த்ரவ்யங்கள் என்று ஒப்புக்கொண்டு அவைகளில் எப்படி விநாசித்வம் வரும் என்று ஆக்ஷேபித்த தார்கிகர்களுடைய அநுமானமானது கண்டிக்கப்பட்டதாக ஆகிறது.

இந்த ச்லோகத்தில் विनाशं अव्ययस्यास्य न कश्चित् कर्तुमर्हति (விநாசம் அவ்யயஸ்யாஸ்ய ந கச்சித் கர்த்துமர்ஹதி) என்ற உத்தரார்த்தத்தினால் வெளியாகும் பொருளோ, ப்ரம்மமானது அதிஷ்டானமானாலும், ரஜ்ஜு ஸர்ப்பத்திற்கு அதிஷ்டானமான ரஜ்ஜு (பழுதை) வானது நசிக்கிறது போல், ப்ரம்மமும் ஏன் நசிக்கக்கூடாது என்ற ஸம்சயத்திற்கு பதிலளிப்பதேதான் ஆகும்,

அதாவது:— லோகத்தில் நசிக்கும் ஸ்வபாவமுள்ள பொருளோ, ஏதோ ஒரு தேசத்தில், ஒரு காலத்தில் ஏதாவது ஒரு பதார்த்தத்தில்தான் நசிக்கும். அதாவது தேசத்தாலும், காலத்தாலும், வஸ்துவினாலும், பரிச்சேதத்தை அடைந்த பொருளுக்குத்தான் நாசம் ஏற்படும். இந்த ச்லோகத்தில் **अव्ययस्य** (அவ்யயஸ்ய) என்று ப்ரம்மத்திற்கு ஒரு விசேஷணம் ஏற்பட்டிருக்கிறது. அந்த பதத்திற்கு, நாசத்திற்கு யோக்யமாகாத பொருள் என்ற அர்த்தம் சொல்லக்கூடாது. நாசத்திற்கு யோக்யமாகாத பொருளுக்கு நாசத்தை ஒருவனும் உண்டுபண்ண சக்தியுள்ளவனாக ஆகமாட்டான் என்ற அர்த்தமானது அவ்வளவு ஸமஞ்ஜஸமாக (ஸரியாக) ஆகாது. ப்ரம்மத்திற்கு 'நாசத்தைச் செய்ய முடியாது' என்பதில் ப்ரம்மம் நாசத்திற்கு யோக்யமாக ஆகாது என்பதையே காரணமாகச் சொல்வது அழகாகுமா? ஆகையால் அப் பதத்திற்கு 'நாசத்திற்கு யோக்யமில்லாத பொருள்' என்று அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளக்கூடாது. அவயவம் இல்லாத பொருள் என்பதும் அப்பதத்திற்கு அர்த்தமாக ஆகாது. அவயவம் இல்லை என்பதும் நாசம் இல்லை என்று சொல்வதற்கும் காரணமாக ஆகாது. அவயவம் இல்லாததான ப்ராகபாவத்திற்கு நாசமானது தார்க்கிகர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் **अव्ययस्य** (அவ்யயஸ்ய) என்ற பதத்திற்கு, **देशतः कालतःवस्तुतश्च अपरिच्छिन्नस्य** (தேசத: காலத: வஸ்துதச்ச அபரிச்சிந்நஸ்ய) என்ற அர்த்தத்தைத்தான் க்ரஹித்துக்கொள்ளவேண்டும். ஒரு தேசத்தில் ப்ரம்மம் இருக்கிறது. மற்றொன்றில் இல்லை என்ற தேச பரிச்சேதமோ, ஒரு காலத்தில் ப்ரம்மம் இருந்தது. மற்றொரு காலத்தில் ப்ரம்மம் இல்லை என்ற காலபரிச்சேதமோ, ப்ரம்மம் மற்றொரு பொருளைக்காட்டிலும் வேறு என்ற வஸ்து பரிச்சேதமோ ப்ரம்மத்திற்கு இல்லை.

எல்லாதேசத்திலும், எல்லாகாலத்திலும் எல்லா வஸ்துவாகவும், பரப்ரம்மமானது 3 விதமான பரிச்சேதமும் அற்றதான பொருளாகும் அதனுல் ஒரு தேசத்தில், ஒரு காலத்தில், ஒரு பதார்த்தத்தால் ப்ரம்மத்திற்கு நாசமேற்பட்டது என்பது இல்லை. லோகத்தில் பதார்த்தத்திற்கோ நாசம் ஏற்படவேண்டுமானுல் எந்த ஊரில்,எப்பொழுது, எதால் மறித்தான் என்பது வ்யவஹாரமிருப்பதால், ஒரு தேசத்தில் ஒரு காலத்தில், ஒரு பதார்த்தத்தால் தான் நாசமேற்படவேண்டும். ப்ரம்மத்தினிடத்திலோ அவ்விதம் 3 விதமானபரிச்சேதமும் இல்லாததினுல் நாசமானது இல்லையென்பது ஸித்தமாகிறது. ரஜ்ஜுஸர்ப்பத்திற்கு அதிஷ்டானமாகிய ரஜ்ஜுவானது மூன்று விதமான பரிச்சேதமும் அற்ற வஸ்துவல்ல. 3 விதமான பரிச்சேதமும் உண்டு, அதனுல் அந்த ரஜ்ஜுவானது அதிஷ்டானமானுலும் அழியலாம். ப்ரம்மமோ அதிஷ்டானமாக மாத்திரம் அல்ல. 3 விதமான பரிச்சேதமும் இல்லாததான மஹிமை உள்ளதாக இருக்கிறது. அதனுல் ரஜ்ஜுவை த்ருஷ்டாந்தமாக வைத்துக் கொண்டு, ப்ரம்மத்திற்கும் நாசம் உண்டு என்று ஆக்ஷேபிக்கமுடியாது. ப்ரம்மமானது அவிநாசியான பதார்த்தம் தான் என்பதை **विनाशमव्ययस्यास्य** (விநாசமவ்யயஸ்யாஸ்ய) என்ற பதத்தால் பகவான் போதிக்கிருர். அந்த உத்தரார்த்தத்தில் **कश्चित्** (கச்சித்) என்ற பதத்திற்கு ஒரு தேசமும், ஒரு காலமும், ஒரு பதார்த்தமும், என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவேண்டும். ஒரு தேசமும், ஒரு காலமும், ஒரு பதார்த்தமும் தேசகால வஸ்து பரிச்சேதமற்ற ப்ரம்மத்திற்கு நாசத்தை யுண்டுபண்ணுவதில் ஸாமர்யத்முள்ளதாக ஆகாது என்பதே அதன் கருத்தாகும். இந்த ச்லோகத்தால் ப்ரம்மம் ஒன்றுதான் ஸத்யம், உலகம் முழுமையும் பொய் என்று நிரூபணம் செய்ததினுல் அந்த உலகத்திற்குள் அடங்கியு

ஸுகதுக்காதிகளும் பொய்யானதினுல் அவைகளைக் குறித்து யுத்தம் என்ற ஸ்வதர்மத்தை நீ கைவிடுவது உசிதமல்ல என்று பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்தார். இந்த ச்லோகத்திற்கு அத்வைத ஸித்தாந்தத்தை அநுஸரித்து ஏற்படும் பொருளை மேல்கண்டபடி விவேகிகள் யாரும் அறியக்கூடும், ஆகிலும் அதின் சுருக்கமானது அடியில் கண்டபடி தெரிந்து கொள்ளத் தகுந்தது.

அத்வைத மதம்.

ப்ரம்மமானது வ்யாபகமாக எங்கும் நிறைந்த வஸ்துவானதினுல் அது ஒன்று தான் ஸத்யமாகும். உலகமானது பரிச்சின்னமானதினுல் பொய்யாகும். ப்ரம்மம், ஸத்யம் ப்ரபஞ்சம் பொய் என்பதே.

த்வைத மதம்.

இந்த ச்லோகத்தில் ப்ரம்மத்திற்கு நாசமில்லை என்பதில் எங்கும் வ்யாபித்து இருக்கும் தன்மையை பகவான் காரணமாகக் குறிப்பிட்டு இருப்பதனுல், ஆகாசம் முதலான ஜகத்தும் எங்கும் வ்யாபித்து இருப்பதினுல், ஜகத்தும் ஸத்யம் தான். ப்ரம்மமும் ஸத்யம், ப்ரபஞ்சமும் ஸத்யம் என்பதே.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

சேதனமாகிய ஜீவன், அசேதனமாகிய ஜகத்தும் ஸ்ரீமந்நாராயணனென்ற பரம புருஷனுடைய சரீரம் தான் என்பதில் ஸமானமானுலும், அசேதனமான ப்ரபஞ்சத்தில், சேதனமாகிற ஜீவன் வ்யாபித்துக் கொண்டிருப்பதினுல், வ்யாபகத்வம் என்ற காரணத்தால் ஜீவன் அவிநாசி என்பதே. அசேதனம் நசிக்கக்கூடியது. சேதனம் வ்யாபகமானதினுல் நசிக்காத பொருள் என்பதே.

(தொடரும்.)

உ

# ஸ்ரீமத் பாகவதம்.

## ச்ருதிகீதோபாக்யானம்.

முதல் அத்யாயத்தில்

**एवं स्वभक्तयो राजन्, भगवान् भक्तभक्तिमान् ।
उषित्वादिश्यसन्मार्गं पुनर्द्वारवतीमगात् ॥**

ஏவம் ஸ்வபக்தயோ: ராஜன் பகவான் பக்தபக்திமான் ।
உஷித்வாதிச்ய ஸன்மார்கம் புனர்த்வாரவதீமகாத் ॥

என்ற ச்லோகத்தால் பக்தவாத்ஸல்யத்தோடு கூடின ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவானவர் மிதிலாபுரியில் ச்ருததேவன், பஹுளாச்வன் என்ற தனது பக்தர்களுக்கு தர்சனம் கொடுப்பதற்காகச்சென்று அவர்களுக்கு தன்னுடைய திவ்ய ஸ்வரூபத்தை தர்சனம் பண்ணும் படியும் அநுக்ரஹித்துவிட்டு அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி கொஞ்சநாள் மிதிலாபுரியிலேயேதான் தன்பரிவாரத்துடன் வஸித்து விட்டு த்வாரகைக்கு தான் கிளம்பி வரும்பொழுது அந்த இரு பக்தர்களுக்கும் ஸன்மார்க்கத்தை உபதேசம் செய்துவிட்டு த்வாரகைக்கு பகவான் வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸன்மார்க்கம் என்ற பதத்திற்கும் ஸ்ரீதரஸ்வாமிகளுடைய வ்யாக்யான ப்ரகாரம், ஸ்வயமாகவே ப்ராமாண்யத்தை அடைந்ததாயும் அப்ரமாணமோ என்று சங்கிக்கக்கூட இடங்கொடுக்காததாயும் உள்ள வேதங்களுக்கு ஸச்சிதானந்த ரூபமான ப்ரம்மத்தினிடத்தில் தான்

மஹாதாத்பர்யம் என்ற அர்த்தமும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (सतां स्वतःप्रमाण भूतानां, अप्रामाण्यकारणरहितानां, वेदानां, मार्गम् ब्रह्मपरत्वं) (ஸதாம் ஸ்வத: ப்ரமாணபூதாநாம், அப்ராமாண்யகாரணாரஹிதாநாம், வேதாநாம், மார்கம் ப்ரஹ்மபரத்வம்) என்று सन्मार्गम् (ஸன்மார்கம்) என்ற பதத்திற்கு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் சுகப்ரம்மஸ்வாமியினுடைய உபதேசத்தைக் கேட்ட பரீக்ஷித்துக்கு வேதங்களெல்லாம் ப்ரம்மபரம் என்று சொல்வதில் த்ருப்தி ஏற்படவில்லை. வேதம் ப்ரம்மபரமாக ஆகாதது என்று ராஜனுடைய அபிப்ராயமாகும். அதை மனதில் வைத்துக்கொண்டு பரீக்ஷித்து மஹாராஜாவானவர் பரமபக்தியுடனும் ச்ரத்தையுடனும் சுகப்ரம்மஸ்வாமியினிடம் ப்ரச்னம் செய்கிறார். ஏப்ரம்மன்! வேதம் ப்ரம்மபரம் என்று பகவானான ஸ்ரீக்ருஷ்ணன் தனது பக்தர்களான ச்ருததேவன், பஹுளாச்வன் என்ற இருவர்களுக்கும் உபதேசம் செய்ததாக தங்களுடைய வாக்கிலிருந்தும் உதித்ததே. அது எவ்விதம் ஸமஞ்ஜஸமாகும். அதாவது,

ब्रह्मन् ब्रह्मण्यनिर्देश्ये निर्गुणे गुणवृत्तयः।
कथं चरन्ति श्रुतयः साक्षात् सदसतः परे ॥
ப்ரஹ்மன் ப்ரஹ்மண்யநிர்தேச்யே நிர்குணே குணவ்ருத்தய: ।
கதம் சரந்தி ச்ருதய: ஸாக்ஷாத் ஸதஸத: பரே ॥

என்றுதான் பரீக்ஷித்து மஹாராஜா சுகப்ரம்மஸ்வாமியைப் பார்த்து கேட்ட ச்லோகமாகும். இதன் பதவுரையாவது:—

ब्रह्मन् (ப்ரம்மன்) = பரப்ரம்மஸ்வரூபமாகிய ஹேகுரோ
सदसतः परे (ஸதஸத: பரே) = ஸத்தாகிய கார்ய ப்ரபஞ்சமோ, அஸத்தாகிய காரண ப்ரபஞ்சமோ இந்த இரண்டுகளுடைய ஸம்பந்தமில்லாமல் அதுகளுக்கு விலக்ஷணமான ஸ்வபாவமுள்ளதாயும்

निर्गुणे (நிர்குணே) = அக்காரணத்தால் ஜாதி, குணம் க்ரியா ஸம்பந்தம் இதுகளற்றதாயும்

अनिर्देश्ये (அநிர்தேச்யே) = அகாரணத்தாலேயே ஒரு சப்தத்திற்கும் விஷயமாகாததாயுமுள்ள

ब्रह्मणि (ப்ரம்மணி) = ஸச்சிதாநந்தரூபமான பரப்ரம்மத்தினிடத்தில்

गुणवृत्तयः (குணவ்ருத்தய:) = ஜாதி குணம் க்ரியா ஸம்பந்தம் இதுகளுக்குள் ஏதாவது ஒன்றை தான் ஒருபொருளைச் சொல்ல நிமித்தமாக வைத்துக்கொண்டு ப்ரவர்த்திக்கும் ஸ்வபாவமுள்ள

श्रुतयः (ச்ருதய:) = சப்தமயமான வேதங்கள்

साक्षात् (ஸாக்ஷாத்) = விதிமுகமாக (அதாவது நேராகவே)

कथं (கதம்) = எப்படி

चरन्ति (சரந்தி) = ப்ரவிருத்திக்கின்றதுகள்

(தாத்பர்யம்) சப்தங்களுக்கு ஒரு அர்த்தத்தில் ப்ரவிருத்தியானது மூன்று விதமாகச் சொல்லப்படும். அதில் (1) முக்யமான ப்ரவிருத்தி, (2) லக்ஷண ப்ரவிருத்தி, (3) கௌண ப்ரவிருத்தி. இதைத்தான் मुख्या, लक्षणा, गौणीति त्रिधाशब्दप्रवृत्तिः (முக்யா லக்ஷணா, கௌணீதி த்ரிதாசப்தப்ரவ்ருத்தி) என்று வித்வான்கள் வர்ணிக்கிறார்கள். முக்யமான ப்ரவிருத்தியும் रूढि (ருடி) (இடுகுறி) என்றும் योग (யோகம்) (காரணம்) என்றும் இருவகைப்படும். ருடியான முக்ய ப்ரவிருத்தியோ ஸ்வரூபத்தாலோ, ஜாதியாலோ குணத்தாலோ க்ரியையினாலோ, ஸம்பந்தத்தாலோ வ்யவஹாரம் செய்வதற்கு யோக்யமான

அர்த்தத்தில் தான் ஏற்படும். அத்துடன் அந்த அர்த்தமும் இன்ன பதத்தால் இன்ன அர்த்தத்தை அறிந்து கொள்ளவேண்டியது என்ற ஈச்வரனுடைய இச்சா ரூபமான ஸங்கேதத்தைக்கொண்டு(அடையாளம்)சப்தத்திற்கு "ரூடி" என்ற முக்ய ப்ரவிருத்தியானது ஒரு அர்த்தத்தில் ஏற்படும். "ரூடி"யாக சப்தமானது எந்த பொருளைச்சொல்லுகிறதோ அதுதான் சக்யார்த்தம் என்றும் சொல்லப்படும். சப்தத்திற்கு சக்தி என்பதே இன்ன சப்தத்தால் இன்ன அர்த்தத்தை க்ரஹித்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பட்டிருக்கும் ஈச்வரனுடைய ஸங்கேதமேதானாகும். அதில் **अस्मात्पदात् अयमर्थोबोद्धव्य इतिईश्वरसंकेतः शक्तिः** (அஸ்மாத்பதாத் அயமர்தோபோத்தவ்ய: இதிஈச்வரஸங்கேத:சக்தி:) என்ற ந்யாயவசனமே ப்ரமாணமாகும். **मृत्पिण्डः** (ம்ருத்பிண்ட:) என்ற சப்தத்தால் ஒரு மண் கட்டியை போதிக்கிறோம். அந்த மண் கட்டிக்கு ஒரு உருவமிருப்பதினால் ஸ்வரூபத்தால் வ்யவஹாரம் பண்ணுவதற்கு யோக்யமாகிறது. அதனால் அந்த மண் கட்டி என்ற அர்த்தத்தில் **मृत्पिण्डः** (ம்ருத்பிண்ட:) என்ற சப்தத்திற்கு ப்ரவிருத்தி வரலாம். ஸ்வரூபத்தால் வ்யவஹாரத்திற்கு யோக்யமான அர்த்தத்தில் தான் சப்தத்திற்கு ப்ரவிருத்தி ஏற்படும் என்பதற்கு இதே உதாரணமாகும் அதுபோல் **गौः** அதாவது "பசுமாடு" என்ற சப்தத்தால் ஒரு பசுவை போதிக்கின்றோம். அந்த இடத்தில் **गोत्वं** (கோத்வம்) என்ற ஜாதியே சப்த ப்ரவிருத்திக்கு நிமித்தமாக ஆகும். ஜாதியினால் வ்யவஹாரம் பண்ணுவதற்கு யோக்யமான அர்த்தத்தில் சப்தத்திற்கு ப்ரவிருத்திஏற்படும் என்பதற்கு இதே உதாரணமாகும். **शुक्लः** (சுக்ல:) என்ற பதத்தால் வெளுப்பான ஒரு வர்ணத்தை போதிக்கின்றோம். அந்த இடத்தில் குணம் தான் சப்த ப்ரவிருத்திக்கு நிமித்தமாகும். குணத்தால் வ்யவஹாரத்துக்கு யோக்யமான அர்த்தத்தில் சப்தம் ப்ரவிருத்திக்

கும் என்பதற்கு இதே உதாரணமாகும். **पाचकः** பாசக: என்ற சப்தத்தால் பரிசாரகனை போதிக்கிறோம். அந்த இடத்தில் பாகக்ரியையே சப்த ப்ரவிருத்திக்கு நிமித்தமாகும் க்ரியையினால் வ்யவஹாரத்திற்கு யோக்யமான அர்த்தத்தில் சப்தத்திற்கு ப்ரவிருத்தி என்பதற்கு இதே உதாரணமாகும். **दाशरथिः** (தாசரதி:) என்ற பதத்தால் தசரதருடைய புத்ரன் என்ற அர்த்தத்தை போதிக்கிறோம். அந்த இடத்தில் பித்ருபுத்ர பாவஸம்பந்தமே சப்த ப்ரவிருத்திக்கு நிமித்தமாகும். ஸம்பந்தத்தால் வ்யவாஹாரம் பண்ண யோக்யமான பதார்த்தத்தில் சப்தத்திற்கு ப்ரவிருத்தி என்பதற்கு இதே உதாரணமாகும். இதுதான் நுடியாக சப்தத்திற்கு முக்ய ப்ரவ்ருத்தி என்பதில் உதாரணங்களாக ஆகும்.

லக்ஷணு ப்ரவிருத்தி என்றால் ஸ்வரூபத்தாலோ, ஜாதியாலோ, குணத்தாலோ க்ரியையாலோ, ஸம்பந்தத்தாலோ, சப்தத்தினுடைய முக்ய ப்ரவிருத்திக்கு இன்ன பதத்தால் இன்ன அர்த்தத்தை அறிந்துகொள்ளத் தகுந்தது என்ற ஈச்வர ஸங்கேதத்தால் விஷயமாகிற அர்த்தத்தை ஒட்டின மற்றொரு அர்த்தத்தில் ஏற்படும் சப்த ப்ரவிருத்தியே லக்ஷணு ப்ரவிருத்தியாகும். அதற்கும் **गंगायांगोषः** (கங்காயாம் கோஷ:) என்றதே உதாரணமாகும். கங்கையென்ற பதத்திற்கு ப்ரவாஹம் என்ற அர்த்தத்தில் தான் முக்யமான ப்ரவிருத்தி ஏற்படும். அந்த முக்யார்த்தமாகிற ப்ரவாஹத்திலோ **गोषं** என்ற சப்தத்தால் சொல்லப்படுகிற ச்ரேணிகள் இருக்க ந்யாயமில்லாததினால் அந்த முக்யார்த்தமாகிய ப்ரவாஹத்தை ஒட்டின கங்காதீரத்தை (கங்கைக்கரையை) கங்கையென்ற பதத்திற்கு அர்த்தம் சொல்லுவதே லக்ஷணு ப்ரவிருத்தியாகும். **अभिधेयाविनाभूते प्रवृत्तिः लक्षणेष्यते** (அபிதேயாவினாபூதேப்ரவ்ருத்தி: லக்ஷணேஷ்யதே) என்ற சாஸ்த்ரமே அதில் ப்ரமாணமாகும்.

கௌண ப்ரவிருத்திக்கோ सिंह्मोदेवदत्तः (ஸிம்ஹோதேவதத்த) என்பதே உதாரணமாகும். அந்த இடத்தில் ஸிம்ம சப்தத்திற்கு ஸிம்மம் என்ற ஒரு ம்ருக விசேஷந்தான் ருடி வ்ருத்தியை ஆச்ரயித்து அர்த்தமாகும். அந்த வாச்யார்தத்தைவிட்டு அந்த வாச்யார்தத்தில் உள்ள க்ரௌர்யம் (கொடூரத்தன்மை) முதலான குணத்தில் सिंहः (ஸிம்ஹ:) என்ற சப்தத்திற்கு லக்ஷணையாக ப்ரவிருத்தியை ஒப்புக்கொண்டு அந்த க்ரௌர்யம் முதலான குணத்தினுடைய ஸம்பந்தம் எந்த தேவதத்தனிடமிருக்கிறதோ அந்த தேவதத்தனை सिंह्मोदेवदत्तः (ஸிம்ஹோதேவதத்த:) என்று ப்ரயோகம் செய்வதினல் இந்த இடத்தில் கௌண ப்ரவிருத்தி யென்று சொல்லப்படும். அதில் लक्ष्यमाणगुणैर्योगात् वृत्तेः इष्टात् गौणता (லக்ஷ்யமாணகுணைர்யோகாத்வ்ருத்தே: இஷ்டாத் கௌணதா) என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும்

யோகப்ரவிருத்திக்கோ पङ्कजं (பங்கஜம்) என்பது உதாரணமாகும். அதாவது ருடிவ்ருத்தியோ, லக்ஷணவ்ருத்தியோ, கௌணவ்ருத்தியோ, இந்த மூன்றுகளுக்குள் ஏதாவது ஒரு வ்ருத்தியினல் போதிக்கப்படுகிற இரண்டு அர்த்தங்களுக்கு ஸம்பந்தம் எங்கு ஏற்படுகிறதோ, அங்குதான் யோகவ்ருத்தியானது ஏற்படும். पंकजं (பங்கஜம்) என்ற இடத்தில் पंक (பங்க) என்ற சப்தத்திற்கு ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்து சேர் என்று அர்த்தம்; ज என்ற பதத்திற்கு ஜன்மமென்று அர்த்தம்; पङ्क; ज என்ற இரண்டு பதங்களால் ரூடிவ்ருத்தியை ஆச்ரயித்து போதிக்கப்படுகிற சேர், ஜன்ம என்ற இரண்டு அர்த்தத்திற்கும் ஏற்படுகிற ஸம்பந்தத்தில் ஸித்திக்கிற தாமரை புஷ்பம் என்ற அர்த்தத்தில் पंकजं (பங்கஜம்) என்ற பதத்தின் ப்ரவிருத்தியை யோக ப்ரவிருத்தி

என்று சொல்லப்படும். இரண்டு பதங்களால் லக்ஷணு வ்ருத்தியி ஞல் போதிக்கப்படும் இரண்டு அர்த்தங்களுடைய ஸம்பந்தத்தால் ஸித்திக்கிற பொருளில் சப்தத்திற்கு ஏற்படுகிற ப்ரவிருத்தியும் யோக ப்ரவிருத்தியாகும். அதற்கு உதாரணமோ **खड्गशूलोहन्ति** (கட்கசூலோஹந்தி) என்பதேயாகும். ஒருவன் யுத்தத்தில் கத்தி யை எடுத்துக்கொண்டு கொல்லவந்தான். அவனே மற்ருெரு ஸமயத் தில சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு கொல்லவந்தான். அந்த மனிதனை காட்டுவதற்கு **खड्गशूलोहन्ति** (கட்கசூலோஹந்தி)என்ற ப்ரயோகம் செய்யப்படுகிறது. **खड्ग** மோ **शूल** மோஸ்வயம் ஜடமான தினல் கொல்லாது. ஆகையால் கட்கபதத்திற்கு கட்கத்தை தரிக்கிற புருஷனை லக்ஷணையாகக்ரஹித்துக் கொள்ளவேண்டும். சூல பதத் திற்கு சூலத்தை தரிக்கிற புருஷனை லக்ஷணையாகக்ரஹித்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் **खड्गः शूलः** கட்கசூல: என்ற இரண்டுபதத்தால் லக்ஷணு வ்ருத்தியினல் போதிக்கப்படுகிற இரண்டுபுருஷனுகிய இரண்டு அர்த் தங்களுக்கும் தாதாத்ம்ய ஸம்பந்தத்தால் ஒரு புருஷன் என்றது ஸித் தித்து அந்த யுத்த வீரனை ஒரு புருஷனிடத்தில் **खड्गशूल** (கட்க சூல) என்ற சப்தத்திற்கு ப்ரவிருத்தியையும் யோக ப்ரவிருத்தி என்று சொல்லப்படும். அப்படிப் போல் இரண்டு கௌணர்த்தத் தினுடைய ஸம்பந்தத்தால் ஏற்படும் பொருளிலும் ஏற்படுகிற சப்த ப்ரவிருத்தியையும் யோக ப்ரவிருத்தி என்று சொல்லப்படும். **सिंहोग्निर्माणवकः** (ஸிம்ஹோக்நிர்மாணவக:) என்பதே அதற்கு உதா ரணமாகும் அந்த இடத்தில் ஸிம்மம் என்றபதத்திற்கும் வாச்யார்த் தமான ஸிம்மத்தினிடத்தில் உள்ள க்ரௌர்யத்தில் லக்ஷணை. அக்னி என்ற பதத்திற்கும் வாச்யார்த்தமான அக்னியிடத்தில் உள்ள

சுத்தத்வம் என்ற அர்த்தத்தில் லக்ஷணை. அந்த க்ரௌர்யம் என்ற குணமும், எந்த மாணவகனிடமிருக்கிறதோ அந்த மாணவகனை கௌண வ்ருத்தியை ஆச்ரயித்து ஸிம்ம பதம் காட்டுகிறது. சுத்தத்வம் என்ற குணம் எந்த மாணவகனிடமிருக்கிறதோ அந்த மாணவகனை கௌண வ்ருத்தியை ஆச்ரயித்து அக்னி பதம் காட்டுகிறது. அந்த இரண்டு மாணவகனுக்கும் அபேத ஸம்பந்தம் என்ற யோகத்தால் ஒரு மாணவகனை ஸித்தித்து அந்த அர்த்தத்தில் **सिंहोग्निः** (ஸிம்மோக்னி:) என்ற சப்தத்திற்கு ப்ரவிருத்தியை யோக ப்ரவிருத்தி யென்றும் சொல்லப்படும். அதாவது இரண்டு பதங்களால் ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்தோ,லக்ஷணுவ்ருத்தியை ஆச்ரயித்தோ, கௌணவ்ருத்தியை ஆச்ரயித்தோ, ஏற்படும் இரண்டு அர்த்தங்களுடைய ஸம்பந்தத்தால் ஒரு பொருளை சப்தம் சொல்லவந்தால் அங்குதான் யோக ப்ரவிருத்தி யென்று சொல்லப்படும். ப்ரம்மத்தினிடத்திலோ ரூடி விருத்தியை ஆச்ரயித்து சப்தமயமான வேதங்கள் ப்ரவிருத்திக்காது என்பதை **साक्षात्कथंचरन्ति** (ஸாக்ஷாத்கதஞ் சரந்தி) என்ற வாக்யத்தால் பரீக்ஷித்து மஹாராஜாவானவர் காட்டுகிறுர்.

**साक्षात्** 'ஸாக்ஷாத்' என்றுல், ரூடி வ்ருத்தியினுல் என்று அர்த்தம். ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்து வேதங்கள் ப்ரம்மத்தைச் சொல்ல எப்படி ப்ரவ்ருத்திக்கும் என்பதே அதனுடைய தாத்பர்யமாகும். ரூடி விருத்தியை ஆச்ரயித்து சப்தமயமான வேதங்களுக்கு ப்ரம்மம் விஷயமாகாது என்பதில் காரணமாக **अनिर्देश्ये** (அநிர்தேச்யே) என்று ப்ரம்மணி என்ற பதத்திற்கு விசேஷணமானது ஏற்பட்டது. ஒரு சப்தத்தால் இது, அது, இப்பேற்பட்டது என்று வ்யவஹாரம் செய்யக்கூடாத பொருள் என்று அதன் அர்த்தமாகும். அதாவது சப்தத்திற்கு விஷயமாகாதது என்பதுதான்.

ஏன் சப்தத்திற்கு விஷயமாகாதது என்றால், அதை ஸித்தாந்தம் செய்ய ப்ரம்மணி என்ற பதத்திற்கு **निर्गुणे** நிர்குணே என்ற விசேஷணமும் ஏற்பட்டது உருவம், ஜாதி, குணம், க்ரியை, ஸம்பந்தம் இதுகளற்றவை என்பதே அதன் பொருளாகும். **श्रुतयः** 'ச்ருதய:' என்ற பதத்திற்கோ **गुणवृत्तयः** 'குணவ்ருத்தய:' என்று ஒரு விசேஷணமும் போடப்பட்டிருக்கிறது. உருவம், ஜாதி, குணம், ஸம்பந்தம், க்ரியை இதுகளுக்குள் ஏதாவது ஒன்றைத் தான் ஒரு அர்த்தத்தில் ப்ரவிருத்திக்க நிமித்தமாக அபேக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவைகள் என்பதே அதன் பொருளாகும். அவ்விதமான ச்ருதிகளுக்கு நிர்குணமான ப்ரம்மத்தினிடத்தில் எப்படி ப்ரவிருத்தி வரும். **निर्गुणे** (நிர்குணே) என்ற பதத்தால் குணவிருத்தியாலும் ப்ரம்மம் சப்தத்திற்கு விஷயமாகாது என்பது ஸித்தமாகிறது. **लक्ष्यमाण गुणैर्योगात् वृत्तेः इष्टात्गौणता** (லக்ஷ்யமாணகுணைர்யோகாத் வ்ருத்தே: இஷ்டாத்கௌணதா) என்று முன்பு கௌண ப்ரவிருத்தியினுடைய லக்ஷணம் சொல்லப்படவில்லையா. நிர்குணமான ப்ரம்மத்தினிடத்தில் குணஸம்பந்தம் ஏது. குணஸம்பந்தமில்லாமலிருக்கும்பொழுது கௌண விருத்தியை ஆச்ரயித்துத்தான் எப்படி ப்ரம்மமானது சப்தத்திற்கு விஷயமாக ஆகும். தவிர ப்ரம்மம் எப்படி நிர்குணமாகும்? என்றதிலோ காரணத்தைக்காட்ட **सदसतःपरे** ஸதஸத: பரே என்ற விசேஷணம் ப்ரம்மணி என்ற பதத்திற்கு ஏற்பட்டது.

அபிவ்யக்தம் என்ற காரணத்தால் புலப்படுகிற கார்ய ப்ரபஞ்சமென்ன. அனபிவ்யக்தம் என்ற காரணத்தால் புலப்படாததான காரண ப்ரபஞ்சமென்ன, இந்த இரண்டுகளுக்கும் விலக்ஷணமான வஸ்துவே ப்ரம்மமாகும். ப்ரபஞ்ச ஸம்பந்தமிருந்தால் ஸகுணமாக

லாம். ப்ரபஞ்ச விலக்ஷணமான ப்ரம்மம் எப்படி ஸகுணமாகும், நிர்குணம் தான். அத்துடன் ஒன்றினுடைய ஸம்பந்தமும் ப்ரம்மத்திற்கில்லாததினால் லக்ஷணா ப்ரவிருத்தியை முன்னிட்டோ, யோக ப்ரவிருத்தியை முன்னிட்டோ, ப்ரம்மமானது சப்தத்திற்கு எப்படி விஷயமாகும். லக்ஷணாப்ரவிருத்திக்கோ, யோகப்ரவிருத்திக்கோ ஸம்பந்தாபேக்ஷை உண்டு என்று முன்பு விளக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உருவம், ஜாதி, குணம், க்ரியை, ஸம்பந்தம் இவை ப்ரம்மத்திற்கு இல்லாததினால் ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்து ப்ரம்மம் சப்தத்திற்கு விஷயமாகாததே. **असंगोह्ययंपुरुषः नहिसज्जते** (அஸங்கோஹ்யயம் புருஷ: நஹிஸஜ்ஜதே) என்ற ச்ருதியால் ப்ரம்மம் அஸங்கமானதினால் ஸம்பந்தத்தை அபேக்ஷிக்கும் லக்ஷணா ப்ரவிருத்தியையோ, யோக ப்ரவிருத்தியையோ ஆச்ரயித்தும் ப்ரம்மம் சப்தத்திற்கு விஷயமாகாததே. ப்ரம்மம் நிர்குணமானதினால் கௌண ப்ரவிருத்தியை ஆச்ரயித்தும் சப்தத்திற்கு விஷயமாகாததே. வேதங்களோ சப்த ரூபமானதினால் ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்தோ, லக்ஷணா வ்ருத்தியை ஆச்ரயித்தோ, கௌணவ்ருத்தியை ஆச்ரயித்தோ, யோக வ்ருத்தியை ஆச்ரயித்தோ தானே ஒரு அர்த்தத்தை போதிக்கும் ஸ்வபாவமுள்ளவைகள். ச்ருதிகளுடைய ஸ்வபாவத்திற்கும் ப்ரம்மத்தினுடைய ஸ்வபாவத்திற்கும் எவ்வளவோ தூரமிருக்கிறதே. அப்படியிருக்கும்பொழுது ஸகல வேதங்களும் **ப்ரம்மபரம்** என்று ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவானவர் மிதிலாபுரியில் **ச்ருததேவன், பஹுளாச்வன்** என்ற தனது இரு பக்தர்களுக்கும் உபதேசம் செய்ததாகச் சொன்னீர்களே அது எப்படி ஸமஞ்ஜஸமாகும் என்று பரீக்ஷித்து மஹாராஜாவினுடைய அபிப்ராயமாகும்.

(தொடரும்.)

# ஸ்ரீமத் ராமாயணம்.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

**इयं सीता ममसुता, सहधर्मचरीतव ।**
**प्रतीच्छचैनां भद्रंते, पाणिं गृह्णीष्व पाणिना ॥**

இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீதவ ।
ப்ரதீச்ச சைநாம் பத்ரம்தே, பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா ॥

இந்த ச்லோகத்தால் ரொம்பவும் விவேகியான ஜனக மஹா ராஜாவானவர், **त्वं** என்ற பதத்தின், லக்ஷ்யார்த்தமாகிய கூடஸ்த ஜீவனாகிய தனது ஆத்மாவை, **तत्** என்ற பதத்தின் லக்ஷ்யார்த்த மாகிய பரப்ரம்மமான ஸ்ரீராமனிடத்தில் அர்ப்பணம் செய்து (அதாவது ப்ரம்மத்தோடு ஜீவனை ஒன்றாகக் கலக்கும்படி செய்து) க்ருதார்த்தனாக ஆனார், என்ற ரஹஸ்யமான அர்த்தமும் வெளியா கிறது. பகவத் ஸ்வரூபத்தை அடையவேண்டுமென்ற ஆவலுள்ள ஜீவனே **सीता** (ஸீதா) என்ற பதத்தின் அர்த்தமாகும். **सीरं** (ஸீரம்) என்ற பதத்தினால் கலப்பையின் முகமாகும். அதிலிருந்தும் உண் டானவளானதினால் ஜானகிக்கு ஸீதை என்ற பெயர் வழங்கி வருகிறது. இதை எல்லா வாதிகளும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. இதனால் அயோநிஜத்வம் என்ற மஹிமையானது ஸீதை என்ற பதத்தின் அர்த்தத்தில் வித்திக்கிறது.

அயோநிஜத்வம் உள்ள இடத்தில் அநாதித்வமும், அநாதித்வம் உள்ள இடத்தில் அயோநிஜத்வமும் ஸமவ்யாப்தமாக இருந்து வருமானதினுல், ஸீதை என்ற பதத்தின் அர்த்தத்தை அயோநிஜம் என்று சொன்னதினுல் அநாதி என்று கிடைக்கிறது. सीता (ஸீதா) என்ற ஸ்த்ரீ லிங்கத்தினுல் (பெண்பால்) பாதந்த்ரத்வம் என்பதும் ஸித்திக்கிறது. ஜீவனே அநாதி என்றும், பகவத்பாரதந்த்ரன் என்றும் சாஸ்த்ரங்களால் தெரியவருகிறது. ஜீவன் அநாதி என்பதில், जीवईशो विशुद्धाचित् तथाजीवेशयोर्भिदा (ஜீவஈசோ விசுத்தாசித், ததாஜீவேசயோர்பிதா) என்று முன் ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்பட்ட சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். ஜீவன் பரதந்த்ரன் என்பதில் जानामिधर्मं नचमेप्रवृत्तिः जानाम्यधर्मं नचमेनिवृत्तिः । केनापिदेवेन हृदिस्थितेन, यथानियुक्तोस्मि तथाकरोमि ॥ ஜாநாமிதர்மம் நசமேப்ரவ்ருத்தி: ஜாநாம்யதர்மம் நசமேநிவ்ருத்தி:। கேநாபிதேவேந ஹ்ருதிஸ்திதேந யதாநியுக்தோஸ்மி ததாகரோமி ॥ என்றது முதலான சாஸ்த்ரம் ப்ரமாணமாகும். ஸந்த்யோபாஸனம் அக்னிஹோத்ரம் முதலான ஸத்கர்மாக்கள் ஸுகஸாதனம் என்று அறிந்த ஜீவனும் அந்த ஸத்கர்மாக்களில் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. பரதாரகமனம், ஸுராபானம் முதலானது அதர்மம், அவைகள் துக்கத்திற்கு ஸாதனம் என்று தெரிந்துகொண்ட ஜீவனும், அவைகளிலிருந்து நிவ்ருத்தி அடைகிறதுமில்லை, இதனுலேயே ஜீவன் ஸ்வதந்த்ரனல்ல என்பது வெளியாகிறது. ஹ்ருதய புண்டரீகத்தில் "अन्तः प्रविष्टः शास्ता जनानां" "அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம்" என்ற சாஸ்த்ரத்தை யனுஸரித்து, அந்தர்யாமியாயிருந்துகொண்டு விளங்கிவருகிற அநிர்வசனீயமான மஹிமையுள்ள ஒரு மஹாபுருஷனுல் எவ்விதமாக ஏவப்படுகிறுனே, அவ்விதம்தான்

ஜீவனானவன் கர்மாக்களில் ப்ரவ்ருத்திக்கிறான். இது லோகத்தில் அனுபவஸித்தமானது. ஆகையால் மேற்சொன்ன ப்ரமாண வசனங்களைக்கொண்டு, அநாதியாயும், பகவானுக்கு நித்யபரதந்த்ரனாயும் பகவானுடைய ஸாருப்யத்தை அடைவதில் த்ருடமான பக்தி, ப்ரபத்தி, சரணாகதி முதலான உபாயங்களை தீவ்ரமாக அநுஷ்டித்து வருகிறவனாயும் உள்ள உத்க்ருஷ்டமான ஜீவன்தான் ஸீதை என்ற பதத்தின் பொருளென்பதை அறியவும்.

ஸீதை என்ற பதத்திற்கு ஜீவன் தான் பொருள். என்பதற்கு இந்த ஸ்ரீமத் ராமாயணத்திலேயே, ஸுந்தரகாண்டத்தில் **"ततो रावणनीतायाः"** "ததோராவணநீதாயா:" என்ற ச்லோகத்தின் வ்யாக்யானமாகிய ஸ்ரீகோவிந்த ராஜீயத்தையும், ஒரு முக்யமான ப்ரமாணமாக விவேகிகள் கவனித்துக்கொள்ளலாம். அந்த ஜீவனானவன் **"अहं"** **அஹம்** என்று ப்ரத்யக்ஷாநுபவத்திற்கு விஷயமானதினால், அந்த ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக் காட்ட **"इयं"** (இயம்) என்ற பதமும் ஏற்பட்டது. **"अहं"** (அஹம்) என்று ப்ரத்யக்ஷ அநுபவத்தில் விஷயமாயும், அநாதியாயும், எப்போதும் பகவத்பரதந்த்ரனாயும், பகவத் ப்ராப்தியில் த்ருடமான அத்யவஸாயத்தோடு (நிச்சயம்) கூடினவனாயும் உள்ள ஜீவன்தான், **"इयं" "सीता"** (இயம் ஸீதா) என்ற இரண்டு பதங்களாலும் வெளியாகிறது. அந்த ஜீவாத்மாவை ஜனக மஹாராஜா ராமார்ப்பணம் செய்கிறார், என்பதேதான் ஸீதாகல்யாண மஹோத்ஸவத்தின் ஸாராம்சமாகும்.

ஜீவனோ, ஒரு ஸமயத்திலும் தனியாக இருப்பதில்லை. ஒன்று ப்ரம்மத்தோடு சேருகிற வழக்கம், அல்லது மனதோடு சேருகிற வழக்கம். ஜாகரத்திலும், ஸ்வப்னத்திலும் மனதுடன் சேர்ந்து விளையாடுகிறான். ஸுஷுப்தியிலும் ஸமாதியிலும், ப்ரம்மத்

தோடு சேர்ந்துகொண்டு விளையாடுகிறான். ப்ரம்மத்தோடு சேர்ந்து கொண்டிருக்கும் ஸுஷுப்தியிலோ,ஸமாதியிலோ, அந்த ஜீவனுக்கு பேரானந்த அனுபவம் ஏற்படுகிறது என்பது ஸர்வலோக ப்ரஸித்த மானது. மனதோடு ஜீவன் கட்டிப்புரளும்போது, மனதிற்குக் காரணமான அவித்யை என்ற ஒரு குலடா ஸ்த்ரீயின் (வ்யபிசாரீ) வசங்கதனாகி, அந்த அவித்யையினிடம் இந்த ஜீவன்ரமித்து, மமகாரம், அஹங்காரம் என்ற இரண்டு பிள்ளைகளை அடிக்கடி உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறான். அந்த இரண்டு பிள்ளைகளாலேயோ, ஜீவனுக்கு யாதொரு விதமான ஸுக லேசமேயில்லை. பெரிய அனர்த்தத்தைத்தான் அடைந்து துக்கப்படுகிறான். இந்த கஷ்டம் மனதோடு சேர்ந்து இருப்பதினால்தான் ஏற்படுகிறது. மனதை விட்டு ஜீவனைப்பிரித்து ப்ரம்மத்தினிடத்தில் சேர்த்துவிட்டால், ஜீவனுக்கு யாதொரு விதமான கஷ்டமேயில்லை. மனதோடு சேர்ந்து கொண்டிருக்கும்போது, அவித்யாஸம்பந்தம் ஏற்பட்டு, தன்னையே கெடுக்கிற மமகாரம், அஹங்காரங்களை இந்த ஜீவன் தானே உண்டு பண்ணிக்கொள்கிறான், என்பதை **"ममसुता"** மமஸுதா என்ற பதங்கள் காட்டுகின்றன. **"मम"** மம என்ற பதத்திற்கு மமகாரம் என்றே அர்த்தமாகும். அது அஹங்காரத்திற்கும் உபலக்ஷண மாகும். அதாவது, மமகாரம் சொன்னதினாலேயே அஹங்காரத் தையும் சேர்த்துக் காட்டும். **सुता** ஸுதா என்றதினால், **सूते प्रसूते इति सुता** (ஸூதே ப்ரஸூதே இதி ஸுதா) என்று அஹங்கார, மமகாரத்தை, உண்டுபண்ணுகிறது. என்பது வெளியாகிறது.

ஜீவனுடைய பாரதந்த்ர்யத்தைக் காட்டுவதில்தான் ஸ்த்ரீலிங் கத்தினுடைய தாத்பர்யமாகும் என்பதையும் விவேகிகள் அறியவும். இதனால் "ममसुता" "மமஸுதா" என்றதிலிருந்து மனதாகிய துஷ்ட

புருஷனுடைய ஸங்கத்தால், அவித்யையாகிற குல்டையினுடைய ஸம்பர்க்கம், ஜீவாத்மாவுக்கு வெகு நாளாக ஏற்பட்டும், அதிலிருந்து தனக்கே சத்ருவான, அஹங்காரம், மமகாரம் என்ற அளவற்ற த்வந்த்வங்களை (இரட்டைகளை) உண்டுபண்ணிக்கொண்டு அதன் மூலம் ஜன்மமரண ரூபமான, அளவற்ற துக்கத்தை அனுபவித்துக் கொண்டு வருகிறவன் இந்த ஜீவன் என்று அறிந்து "**इयं सीता**" "இயம் ஸீதா" என்ற பதங்களினால், அந்த ஜீவனையே ஸத்கர்மானுஷ்டானங் களாலும், ஸகுணப்ரம்ம உபாஸனங்களாலும், 'நான் அநாதி பகவத் பரதந்த்ரன் பகவத் ப்ராப்தியை நான் எப்பொழுது அடையப் போகிறேன்' என்ற அத்யவஸாயம் (நிச்சயம்) உள்ளவனாகச்செய்து அவ்விதம் சுத்தமான த்வம் பதார்த்தமாகிய ஜீவனை ராமப்ரம் மார்ப்பணம் செய்யவேண்டும் என்றதையே ஸ்வாநுபவத்தினால், ஜனக மஹாராஜாவானவர் ப்ரகாசப்படுத்தினார்.

அவ்விதம் ஜீவனுக்கு பகவத் ஸ்வரூபத்தை அடைவதில் உபாய மோ, ஸநாதன தர்மம்தான் என்பதையும், **सहधर्मचरीतव** (ஸஹ தர்மசரீதவ) என்ற வாக்யமும் விளக்கிக்காட்டுகிறது. ராமா, உனக்கு ஸமானமான தர்மத்தை ஆசரிக்கிறவள் இந்த ஸீதை என்று சொல் வதினால், பகவத் ஸ்வரூபத்தை அடையும் பொருட்டு, யோக்யமான ஸத்தர்மங்களை, அனுஷ்டித்து, சுத்தனாக இருக்கும் ஜீவன் என்றே அந்த வாக்யத்தின் கருத்தாகும். **कौमारे आचरेत् प्राज्ञः धर्मान् भागवतानिह** (கௌமாரே ஆசரேத் ப்ராக்ஞ: தர்மான் பாகவதாநிஹ) என்ற ஸ்ரீமத் பாகவத வசனத்தினால் பகவத் ஸ்வரூபத்தை அடை வதற்கு ஸத்தர்மம் தான் முக்யமான காரணமாகும் என்றும் தெளி வாகிறது. அவ்விதம் ஸத்தர்மத்தால், சுத்தமான தனது ஆத் மாவை, ஸ்ரீராமனை க்ரஹித்துக்கொள்ளும்படி, ஜனக மஹாராஜனை

வர் ப்ரார்த்திக்கிறார், என்பதை प्रतीच्छचैनां (ப்ரதீச்சசைநாம்) என்ற பதமானது காட்டுகிறது.

பாரதந்த்ரியத்தைக் காட்டுவதில் தான், ஸ்த்ரீ லிங்கம் என்று திருப்பிதிருப்பி மேலே சொல்லப்படுகிறது. அதனாலே ஸத்ரீயோ என்று ப்ரமிக்கவேண்டாம். உத்தம ஜீவன்தான் இவ்விதம் லக்ஷண முள்ள ஸ்த்ரீ ஜீவனாலும் ஸம்மதம்தான். அப்படி ராமப்ரம்மத்தி னிடத்தில் ஜீவனை அர்ப்பணம் செய்ததினால், ஜீவனுக்கு ஏற்படுகிற பலன் மோக்ஷம் தான் என்பதையே, भद्रंते (பத்ரம்தே) என்ற பதத் தினால் அறியவும். ஸ்ரீராமா உன் மூலமாக என் ஆத்மாவுக்கு மோக்ஷம் ஏற்படவேண்டும் என்றுதான் அதின் பொருள். ராம ப்ரம்மத்தினிடத்தில் ஜீவனை அர்ப்பணம் செய்யும்போது, ஜீவனுக்கு ஜாகரத்திலும், ஸ்வப்னத்திலும் ஸ்நேஹிதனாயிருந்த மனதையும் சேர்த்து அர்ப்பணம் செய்யக்கூடாது. அப்படியானால், ராமப்ரம் மத்தினிடத்தில் போய்ச்சேர்ந்தும், அங்கும் இந்த ஜீவனை ஸம்ஸாரி யாகச் செய்துவிடும். அதற்காக மனதை ஞானாக்னியினால் சாம்ப லாகச் செய்துவிட்டு, சுத்த ஜீவனை மட்டும் ராமப்ரம்மதினிடத்தில் அர்ப்பணம் செய்யவேண்டும். என்பதை प्रतीच्छ च (ப்ரதீச்சச) என்ற இடத்திலுள்ள ச காரம் காட்டுகிறது. ஜீவனை ராமப்ரம்மத் தினிடத்தில் அர்ப்பணம் செய்யும்போது, அந்த ஜீவனைச்சேர்ந்த ஸகலமான பரிஜனங்களுக்கும் மோக்ஷலாபம் ஏற்பட்டு, பகவத் ஜனங்களாகவே ஆகிவிடுகிறார்கள்.

ஒரு ஜீவன் பரம்பொருளை அறிந்தால் அந்த ஜீவனைச்சேர்ந்த மற்ற எல்லா லோகமும் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறார்கள் என்ற வேதாந்த சாஸ்த்ரத்தின் மர்யாதையையும், पाणिं गृह्णीष्वपाणिना (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்ற வாக்யத்தினால் வால்மீகி

மஹர்ஷியானவர் வெளியிடுகிருர். **पाणि** (பாணி) என்ற சப்தத்திற்கு கை என்றே அர்த்தமல்ல. **पणस्य इयं पाणिः** (பணஸ்ய இயம் பாணி:) என்ற ஸமாஸத்தால், ஜநக மஹாராஜாவினுல், சிவதனுஸ்ஸை முறித்தவனுக்கு ஸீதையைக் கல்யாணம் செய்து கொடுக்கிறது, என்று ஏற்படுத்தியிருந்த பந்தயமே "**पण्**" (பணம்) என்ற சப்தத்தின் பொருளாகும். அந்த பணத்தை நிறைவேற்றிவிட்டு ஸ்ரீராமன் இதை ஸம்பந்தித்த கன்னிகையை அந்வேஷணம் செய்யும் போது அந்த ஸிதையைக் காட்டி இவள்தான் அப்பா ! அந்த பணத்தை (பந்தயத்தை)ச்சேர்ந்த ஸ்த்ரீ என்று போதித்தார். ஆகையால் **पाणिः** (பாணி:) என்ற பதத்தால் ஜானகி என்றே அர்த்தம் வைத்துக் கொள்ளவேண்டும். மற்ருெரு **पाणि** பாணி சப்தத்திற்கோ, அந்த பணம் என்ற பந்தயத்தை ஏற்படுத்தின புருஷன் என்று அர்த்தம். அப்பா ராமா! பணத்திற்கு (பந்தயத்திற்கு) விஷயமான ஸீதையை க்ரஹிக்கும் போது அந்த பந்தயத்திற்கு கர்த்தாவான புருஷனேடு சேர்த்து க்ரஹித்துக்கொள் என்று அறியவும். த்விதீயாந்தமான பாணி சப்தத்தை மதி சப்தம்போல் இகாராந்த ஸ்த்ரீலிங்கமாகவும், த்ருதீயாந்தமான பாணிசப்தத்ஸத, ஹரி சப்தம்போல் இகாராந்த புல்லிங்கமாகவும், வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸீதை ராமனுடைய ஜனமாக ஆனுல், ஸீதையைச் சேர்ந்த ஜனகமஹாராஜாவும் ராமனைச்சேர்ந்த ஜனமாக ஆகிருர். ஸீதை என்றேலோ பகவத்ப்ராப்தியில் அத்யவஸாயமுள்ள உத்தமஜீவன் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகையால் ஜீவனை ராமப்ரம் மார்ப்பணம் செய்துவிட்டால், அந்த ஜீவனைச் சேர்ந்த ஸகல பரிவாரங்களும் பரப்ரம்மத்தைச் சேர்ந்தவர்களாகவே ஆகிருர்கள் என்ற வேதாந்த சாஸ்த்ரமர்யாதையானது ஸ்பஷ்டமாக பாஸிக்கிறது.

இதனால் इयं सीता (இயம் ஸீதா) என்ற ச்லோகத்தால் வெளியாகும் தத்வத்தை அடியில்கண்டவாறு முமுக்ஷு ஜனங்கள் அறியவும். அதாவது அநாதிகாலமாக இந்த ஜீவன் மனதாகிற துஷ்ட புருஷனோடு ஸ்நேஹம் செய்துகொண்ட காரணத்தினால், அவித்யையாகிற வேசியின் ஸம்பர்க்கம் ஏற்பட்டு, அஹங்காரம், மமகாரம் என்ற தன்னைக்கொல்லும் ம்ருத்யுவையே, தனக்குப் பிள்ளையாக உண்டு பண்ணிக்கொண்டு கஷ்டப்படுகிறான். அந்த ஜீவன் அந்த கஷ்டத்திலிருந்து, நிவ்ருத்தி அடைவதற்கு ஸத்கர்மாநுஷ்டானங்களையும், ஸகுணப்ரம்ம உபாஸனங்களையும், ஒழுங்காக அனுஷ்டித்து வந்தால், துஷ்ட ஸம்ஸர்க்கங்களை விலக்கிக்கொண்டு ஸத்ரூபமான ப்ரம்மப்ராப்தியை அடைய யோக்யனாக ஆகிறான். அப்படி ஒரு ஜீவன் ஸத்ரூபமான ப்ரம்மத்தையடைந்து விட்டால், அவனைச் சேர்ந்த மற்ற எல்லா ஜீவர்களும் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறார்கள். என்றது வெளியாகிறது. இதை ஜனகமஹாராஜாவானவர் அனுஷ்டித்துக் காட்டினார். இதுதான் ஸீதாகல்யாணம் என்பது.

(தொடரும்)

# ப்ரம்மவித்யா.

अथातो ब्रह्मजिज्ञासा ॥ (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா)

இந்த ஜிக்ஞாஸாதிகரணத்திற்கு அநுபந்த சதுஷ்டயத்தை நிர்ணயம் செய்கிற ந்யாயங்களை ப்ரகாசப்படுத்துகிற ஸூத்ரம் என்றும் பெயருண்டு. இந்த அதிகரணத்தினலே, வேதாந்த சாஸ்த்ரங்களுக்கு ஜீவப்ரம்ம ஐக்யம்தான் விஷயம் என்பது வெளியாகிறது. அது எப்படி யெனில் ஸூத்ரக்காராலோ ப்ரம்ம ஞானத்திற்கு காரணமான வேதாந்த விசாரத்தைச் செய்யவேண்டுமென்று ஸூசிப்பித்திருக்கிருர்கள். அதனல் வேதாந்த விசாரத்திற்கு ப்ரம்ம ஞானம்தான் பலன் என்று தெரிகிறது. ப்ரம்ம ஞானத்திற்கோ, அக்ஞான நிவ்ருத்தியே பலமாகும். ஞானமானது தனக்கு விரோதியான அக்ஞானத்தை நிவ்ருத்தி செய்வதைத்தவிர வேருெரு பலத்தையும் கொடுக்க சக்தியுள்ளதாக ஆகாது. ப்ரகாசத்திற்கு தமோ நிவ்ருத்தியைத்தவிர வேறு பலன் ஏதாவது உண்டா? இல்லாதபொருளை இருக்கும்படி செய்வதிலோ, இருக்குற வஸ்துவை இல்லாமல் செய்வதிலோ, ஒருவஸ்துவை மற்ருெரு வஸ்துவாகச் செய்வதிலோ, ப்ரகாசத்திற்கு ஸாமர்த்யமில்லை. இருக்கும் வஸ்துவை மறைத்துக்கொண்டிருக்கும் இருளைப்போக்கடிப்பதில் தான் ப்ரகாசத்திற்கு ஸாமர்த்யமுண்டு. அதுபோல் ஞானமும் எப்போதும் இருக்கும் பொருளை மறைக்கும் அக்ஞானத்தைத்தான் நிவ்ருத்தி செய்யும். ப்ரம்மஞானமும் ஞானமானதினல், அக்ஞான நிவ்ருத்தியே தான் அதற்கு பலனுகும். அக்ஞானம் நாசத்தையடைந்

துவிட்டால், அந்த அக்ஞானத்தினுல் கல்பிக்கப்பட்ட கர்த்ருத்வ போக்த்ருத்வாதி ரூபமான ஸம்ஸாரம் என்ற பெரிய அனர்த்தத்திற்கு ஆத்யந்திகமான நிவ்ருத்தி ஏற்பட்டு விடுகிறது. இதனுல் கர்த்ருத்வ, போக்த்ருத்வாதி ரூபமான ஸம்ஸாரம் என்ற அனர்த்த ப்ரம நிவ்ருத்தியும், ப்ரம்மஸாக்ஷாத்காரத்தினுலே பரம்பரையாக ஸித்திக்கிறது. நான் கர்த்தா, நான் போக்தா என்ற அனர்த்தப்ரம்மோ ஈச்வரனுக்கு இல்லையென்பது ப்ரஸித்தமானது. அந்த அனர்த்த ப்ரமமானது ஜீவகதமாகத்தான் அநுபவிக்கப்படுகிறது. அனர்த்தப்ரமத்திற்கு காரணமோ அக்ஞானம் தான். அனர்த்தப்ரமத்திற்கு எது ஆச்ரயமோ அதனுடைய அக்ஞானம்தான், அந்த அனர்த்தப்ரமத்திற்கும் காரணமாகும்.

ஒரு மனிதனுக்கு கிளிஞ்சலைப் பார்க்கும்போது வெள்ளி என்ற ப்ரமம் உண்டாகிறது. வெள்ளி என்ற ப்ரமத்தைத்தான், சுக்தி ரஜதப்ரமம் என்று வேதாந்திகள் சொல்கிறுர்கள். அந்த ரஜத ப்ரமத்திற்கே சுக்தி தான் அதிஷ்டானமாகும். அந்த சுக்தியை (கிளிஞ்சலை)ப்பார்த்து, இதுகிளிஞ்சல் என்ற ஞானம் ஏற்பட்டு விட்டால், அதில் ஏற்பட்டிருக்கும் ரஜதப்ரமமானது போய் விடுகிறது. இது சுக்தி (கிளிஞ்சல்) என்ற ஞானமில்லாத காலத்தில் தான் ரஜதப்ரமம் ஏற்படுகிறபடியினுலே, சுக்தியில் ஏற்படுகிற ரஜத ப்ரமத்திற்கு, சுக்தியை விஷயீகரித்த (ஸம்பந்தப்பட்ட) அக்ஞானம் தான் காரணமாகும். ஆனுல், சுக்தி, ரஜதம் என்று ப்ரமத்தின் ஆகாரம் (உருவம்) அல்ல. इदं रजतं (இதம் ரஜதம்—இது வெள்ளி) என்று தான் அந்த ப்ரமத்திற்கு ஆகாரம் ஏற்படுகிறது. அதனுல் ரஜதப்ரமத்திற்கு சுக்தி அம்சமானது அதிஷ்டானமல்ல. இதம் அம்சம்தான் அதிஷ்டானமாகும். அந்த இதம் அம்சத்தை விஷயீ

சரித்த அக்ஞானம் தான் அந்த ரஜதப்ரமத்திற்கு காரணம். இதம் அம்சத்தை அவலம்பித்த (ஸம்பந்தப்பட்ட) அக்ஞானத்தினுல் இதம் அம்சத்தில் கல்பிக்கப்பட்ட ரஜதப்ரமமானது நஷ்டமாக ஆகவேண்டுமானுல், இது என்ற ஞானம் போரவில்லை. கிளிஞ்சல் என்ற ஞானம் தான் வேண்டும். இதனுல் சுக்தி அம்ச ஞானத்தினுல் இதம் அம்ச அக்ஞானத்திற்கு நிவ்ருத்தி வந்து, அதன் மூலமாக ரஜதப்ரமமானது நஷ்டமாகிறது. இது வித்வான்களுடைய அனுபவ ஸித்தமான விஷயம்.

அதில் சுக்தி அம்சஞானத்தால் இதம் அம்ச அக்ஞானத்திற்கு நிவ்ருத்தி வரவேண்டுமேயானுல், சுக்தி அம்சம் வேருகவும், இதம் அம்சம் வேருகவும் இருந்தால் வருமா ? கடஞானத்தால் பட அக்ஞானத்திற்கு நிவ்ருத்தி வருமா ? கடஞானத்தால் கடஅக்ஞானம் தான் நிவ்ருத்தியாகும். அதனுல் சுக்தி அம்சஞானத்தால், இதம் அம்சஅக்ஞானத்திற்கு நிவ்ருத்தி ஏற்படுவதைக்கொண்டு, இதம் அம்சமும், சுக்தி அம்சமும் ஒன்று தான் என்று அறியவும். அது போல், ஜீவகதமான, கர்த்ருத்வ, போக்த்ருத்வாதி ரூபமான, அநர்த்த ப்ரமத்தினுடைய நிவ்ருத்திக்கு, ப்ரம்மஞானத்தை முக்யமாக அடையவேண்டுமென்று ஸூத்ரக்காரர்களோ சொல்லியிருக்கிருர்கள். ஜீவனிடத்தில் அனுபவிக்கப்படுகிற அநர்த்தப்ரமத்திற்கோ, ஜீவாக்ஞானம் தான் காரணமாகும். ப்ரம்மஞானத்தால், ஜீவாக்ஞானம் நஷ்டமாகி, அதனுல் ஜீவகதமான கர்த்ருத்வ, போக்த்ருத்வாதி ரூபமான அநர்த்தப்ரமத்திற்கு நிவ்ருத்தியை உபதேசிக்கும். ஸூத்ரக்காரர்களோ, ஜீவப்ரம்ம ஐக்யம் என்ற விஷயத்தையும் ஸூசிப்பிக்கிருர்கள் என்று வெளியாகிறது. இல்லாதபோனுல், ஜீவன் வேறு, ப்ரம்மம் வேறு, என்று இருந்தால், ப்ரம்மஞானத்

தால், ஜீவாக்ஞானத்திற்கு எப்படி நிவ்ருத்தி ஏற்படும். ஸமான விஷயத்தோடு கூடின ஞான, அக்ஞானங்களுக்குத்தான் நிவர்த்ய நிவர்த்தக பாவம் உண்டென்பது, மேற்சொல்லிய த்ருஷ்டாந்தத் தால் (சுக்திரஜதம்) நன்கு வெளியாகிறது.

ஆகையால் ப்ரம்மஞானத்தால் ஜீவாக்ஞானத்தினுடைய நிவ் ருத்தியை போதிக்கிற ஜிக்ஞாஸாதிகரணத்தினலே வேதாந்த சாஸ்த் ரங்களுக்கு ஜீவப்ரம்ம ஐக்யமே விஷயம் என்பது ஸித்தமா கிறது. கர்த்ருத்வ, போக்த்ருத்வாதி ரூபமான ஸம்ஸாரம் என்ற அனர்த்தப்ரம நிவ்ருத்தியாகிற பெரிய பந்தநிவ்ருத்தியே ப்ரயோ ஜனமாகவும் ஆகும். ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியோடு கூடின புருஷன் அதிகாரியாக ஆகுவான். ச்ருதி (வேதம்) யினுடைய அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்கு அநேகவிதமான ந்யாயங்களை இந்த சாஸ்த்ரமானது வெளியாக்கிறபடியால், ச்ருதி ப்ரதிபாத்ய மான தத்வத்திற்கு, இந்த சாஸ்த்ரம் ப்ரதிபாதகமாக (வெளிக் காட்டுகிறதாக) ஆகிறபடியால், ப்ரதிபாத்ய, ப்ரதிபாதக பாவம் என்ற ஸம்பந்தமும் ஸித்திக்கிறது. இவ்விதம் விஷயம், ப்ரயோ ஜனம், அதிகாரி, ஸம்பந்தம் என்றதான அநுபந்த சதுஷ்டயமும் இந்த உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரமாகிய ப்ரம்மமீமாம்ஸையில் இருந்துவருகிறது. ஆகையால் ஜிக்ஞாஸுக்களுக்கு (அறிந்து கொள்ள ஆவலுள்ளவர்களுக்கு) இதில் ப்ரவ்ருத்தி வரலாம் என் பதையும் **अथातो ब्रह्मजिज्ञासा** (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஜிக்ஞாஸாதிகரணமானது வெளிக்காட்டுகிறது. இந்த அதிகரணத் திற்கு அநுபந்த சதுஷ்டய நிர்ணயக ஸூத்ரமென்றும் சொல் வார்கள், ஒவ்வொரு அநுபந்தத்தையும் நிர்ணயம் செய்கிற அநு மான ப்ரயோகத்தையோ அடியிற் கண்டவாறு அறியவும்:—

1. அதிகாரியை நிர்ணயம் செய்கிற அனுமானம்.

**साधनचतुष्टयसम्पन्नः पुरुषः । एतच्छास्त्र विचाराधिकारी । एतच्छास्त्र विचारहेतुभूत साधनचतुष्टय सम्बन्धित्वात् । यच्छास्त्र विचारहेतुभूत साधनसम्बन्धी यः । सः तच्छास्त्रविचाराधिकारी ॥ यथा धर्मविचारहेतुभूत वेदाध्ययनसम्बन्धी पुरुषः धर्मविचाराधिकारी ॥**

2. விஷயத்தை நிர்ணயம் செய்கிற அனுமானமாவது:—

**एतच्छास्त्रं । जीवब्रह्मैक्यविषयकं । जीवगत अनर्थभ्रमनिवर्तक ब्रह्मसाक्षात्कारानुकूल विचार विषयत्वात् । यन्नैवं तन्नैवं यथाधर्ममीमांसा ॥**

3. ப்ரயோஜனத் (பலன்) தைநிர்ணயம் செய்கிற அனுமானமாவது:—

**एतच्छास्त्रं, मोक्षफलकं, बन्धोपादानभूत अज्ञाननिवर्तकज्ञानानुकूल विचारविषयत्वात् । यन्नैवं तन्नैवं यथाधर्ममीमांसा ॥**

4. ஸம்பந்தத்தை நிர்ணயம் செய்கிற அனுமானமாவது:—

**एतच्छास्त्रं । श्रुत्या प्रतिपाद्यप्रतिपादक भावसम्बन्ध सम्बन्धी । श्रुत्यर्थनिर्णायकन्याय ग्रथनात्मकत्वात् । यदित्थं तत्तथा यथा धर्ममीमांसा ॥**

இவ்விதம் அநுபந்தசதுஷ்டயத்தை நிர்ணயம் செய்கிற அனுமானங்களையும், வேதாந்த சாஸ்த்ர ரஸத்தை ஆஸ்வாதனம் செய்வதில் ஸமர்த்தர்களான புத்திமான்கள் அறியவும். இதனுல் சாஸ்த்ரத்திற்கேற்பட்ட அநுபந்த சதுஷ்டயம் சொல்லப்பட்டது. **अथातो ब्रह्मजिज्ञासा** (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற அதிகரணத்தில், அதிகரண லக்ஷணங்களோ, **श्रोतव्यः** "ச்ரோதவ்ய:" என்றது

முதலான வேதாந்தச்ரவணத்தை விதிக்கும் வாக்யங்களே விஷயங்களாகும். அந்த வேதாந்தவாக்யங்கள் அநுபந்தசதுஷ்டயத்தோடு கூடினதா, இல்லையா என்பது ஸம்சயம். அநுபந்த சதுஷ்டயத்தோடு கூடினதல்ல என்பது பூர்வபக்ஷம். அநுபந்த சதுஷ்டயத்தோடு கூடினது தான் என்பது ஸித்தாந்தம். இந்த அதிகரணமே இந்த சாஸ்த்ரத்தில் முதலாவது அதிகரணமானதினுல், இந்த அதிகரணத்திற்கு பூர்வதந்த்ரம் என்ற பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரத்தோடு ஸங்கதி. இந்த அதிகரணத்தில் வேதாந்த விசாரம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதால், அந்த விசாரத்தில் தீவ்ரமான வைராக்யமுள்ளவனே முக்யாதிகாரியாக ஆகுவான். வைராக்யமோ மனது சுத்தமானுல்தான் ஏற்படும்;மனது சுத்தமாகுவதற்கோ, அக்னி ஹோத்ரம் முதலான ஸத்கர்மாக்களை அவச்யம் அநுஷ்டித்தே தீரவேண்டும். அதனுல் தர்மத்தை போதிக்கிற பூர்வ தந்த்ரம் ஹேதுவாகவும், ப்ரம்மவிசாரத்தை செய்யவேண்டும் என்று சொல்கிற ஜிக்ஞாஸாதிகரணம் ஹேதுமத்தாகவும் ஆகிறபடியினுல், பூர்வதந்த்ரத்திலுள்ள அதிகரணங்களோடு கூட, உத்தர தந்த்ரத்திலுள்ள முதலாவது அதிகரணமான ஜிக்ஞாஸாதி கரணத்திற்கு ஹேதுஹேதுமத்பாவ ஸம்பந்தம் என்பது ஸித்திக்கிறது.

இதனுல் முன் ஜன்மாக்களில் ஸத்கர்மாக்களை பரமேச்வரார்ப்பண புத்தியோடு செய்து சித்தசுத்தி மூலமாக, விவேகம், வைராக்யம், சமாதிஷட்கம், முமுக்ஷுத்வம் என்ற நான்கு விதமான ஸம்பத்தியோடு கூடினவனுக ஆகி, ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமான வேதாந்தவிசாரத்தை செய்யவேண்டும் என்பதே முதலாவது அதிகரணத்தின் ஸாராம்சமாகும்.

(தொடரும்.)

# ஸுதர்சனன் ஓர் வரப்ரஸாதி

## ஸ்ரீதேவீ பாகவதத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது

கோஸல தேசத்தில், அயோத்யா நகரத்தில் த்ருவஸந்தி என்று ஓர் அரசன் இருந்தான். அவன் நீதிசாஸ்த்ரத்திலும், மற்ற சாஸ்த்ரங்களிலும் ரொம்பவும் நிபுணனாகவும், க்ஷத்ரிய ஜாதிக்குரிய ஸத்கர்மாக்களை அநுஷ்டிப்பதில் ரொம்பவும் ச்ரத்தையுள்ளவனாக வும் இருந்து வந்த காரணத்தால், தர்மங்களே உருவமெடுத்துக் கொண்டு இந்த அரசனாக வந்திருக்கிறதோ என்று ஜனங்களால் கொண்டாடப்பட்டவனாகவும் இருந்துவந்தான். ப்ரஜைகளையோ, தன் குழந்தைகளைப்போல் பாவித்துக்கொண்டு நீதிக்கு விரோதம் இல்லாமல் பரிபாலனம் செய்து வந்தான். அந்த அரசனுக்கோ மனோரமை என்றும், லீலாவதீ என்றும் இரண்டு மனைவிகள் உண்டு. அந்த இருவர்களும் ஸௌந்தர்யத்திலோ, லாவண்யத்தி லோ, ஸௌகுமார்யத்திலோ, தனது பர்த்தாவான த்ருவஸந்தி என்ற அரசனுக்கு ப்ரியமான கார்யத்தைச் செய்வதிலோ, ஒருவர்க் கொருவர் நிகரற்ற மஹிமையுள்ளவர்களாக இருந்து வந்தார்கள். அந்த இரண்டு மனைவிகளோடும் த்ருவஸந்தி என்ற அரசனானவன். அநேக தேசங்களிலும், மலைகளிலும், உத்யானவனங்களிலும் அந் தந்த காலங்களில் க்ரீடாரஸத்தை அநுபவித்துக்கொண்டு இரு மனைவிகளிடமும், ஸமமான ப்ரேமையுள்ளவனாக இருந்துவந்தான்.

அந்த இருவர்களும் ஒருவர்க்கொருவர் தோழிகளைப் போலும், அக்காள் தங்கைகளைப் போலவும், ப்ரீதியுள்ளவர்களாக இருந்துவந்த

காரணத்தால் அந்த இருவர்களுக்கும், சக்களத்தி என்ற தோஷமே ஏற்பட ந்யாயமில்லாமலிருந்தது. மனோரமை என்றவள் ராஜனுக்கு முதல் மஹிஷியாகவும், லீலாவதி என்றவள் இரண்டாவது மஹிஷியாகவும் விளங்கிவந்தாள். மனோரமைக்கு ஸுதர்சனன் என்ற ஒரு குமாரன் பிறந்தான். லீலாவதிக்கு சத்ருஜித் என்ற ஒரு குமாரனும் பிறந்தான். அந்த இரு குமாரர்களும் ஸகல விதமான ராஜ லக்ஷணங்கள் பொருந்தினவர்களாகவே இருந்துவந்தார்கள். அரசனும் இரு குழந்தைகளையும் ஒரே மனதோடும், லாளனை செய்துகொண்டு, ஜாதகர்மா, நாமகரணம் முதலான வேதத்தில் விதிக்கப்பட்ட ஸம்ஸ்காரங்களில் முதன்மையான ஸத்கர்மாக்களை ஒரே முகூர்த்தத்தில் இரண்டு குழந்தைகளுக்கும் செய்துவைத்தான். இவ்விதம் சத்ருஜித், ஸுதர்சனன் என்ற இரண்டு குழந்தைகளுக்குள், லீலாவதியின் குழந்தையான சத்ருஜித் என்றவன் ரொம்பவும் இளம்பருவத்திலேயே அழகாகப் பேசுவதும் விளையாடுவதுமாக இருந்துவந்த காரணத்தால் ராஜனுக்கு, அந்தக் குழந்தையினிடம் நாளுக்குநாள் ப்ரீதியானது அதிகரித்துக்கொண்டு வந்தது. மனோரமையினுடைய குழந்தையான ஸுதர்சனனோ எல்லா லக்ஷணங்களோடு பொருந்தினவனாக இருந்தாலும், சத்ருஜித்தைப்போல் ஸாமர்த்யமில்லாமலிருந்த காரணத்தால் ராஜனுக்கு ஸுதர்சனனிடம் ப்ரீதி குறைந்தும் வந்தது. லோகத்தில் அழகாகப் பேசும் குழந்தைகளிடம் தாய்தந்தைகளுக்கோ, மற்றவர்களுக்கோ ப்ரேமை ஏற்படுவது ஸஹஜம் தானே!

இவ்விதம், இருந்துகொண்டுவரும் ஸமயத்தில், த்ருவஸந்தி என்ற அரசன் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடப் போனான். சில ஸைன்யங்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்

அரண்யத்தில் விசித்ரமான ம்ருகங்களை அடித்து, ரொம்பவும் அழகாக வேட்டையாடினன். அவ்விதம் அரசன் வேட்டையாடிக் கொண்டிருக்கும் ஸமயத்தில் ஒரு ஸிம்மமானது தன் குஹையி லிருந்து வெளிக்கிளம்பிவந்து அரசனைக் கோபத்துடன் பார்த்தது. இதற்கு முன்னலேயே, ஏதோ ஒரு ஸமயத்தில் இந்த அரசன் வேட்டையாடும்பொழுது, இந்த ஸிம்மத்தை ஏதோ ஒரு பாணத் தால் அடித்திருப்பான் போல் தெரிகிறது. அந்த ஸிம்மமானது அந்த விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு மிகுந்த கோபா வேசத்துடன் ராஜனைக்கொன்றுவிட யத்னம் செய்தது. அரசனும் அந்த ஸிம்மத்தைப் பார்த்து தைர்யத்துடன் பெரிய கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு, ஸிம்மத்திற்கு எதிராக நின்று போர் செய்ய ஆரம்பித்தான். அதிலிருந்து ஸிம்மத்திற்கும் அரசனுக் கும் பயங்கரமான யுத்தம் ஏற்பட்டுவிட்டது. அரசனுடன் பின் தொடர்ந்து வந்த ஸேனைகளும், ஸிம்மத்தை அநேக விதமான பாண வர்ஷங்களால் அடித்தார்கள். ஆனல் ஸிம்மமோ, மிகுந்த கோபத்துடன் அரசனுடைய மார்பில் ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்து, தன்னுடைய உக்ரமான நகங்களால், அரசனுடைய மார்பைப் பிளந்து அரசனை உயிர் துறக்கச் செய்துவிட்டது. அந்த ஸிம்ம மும் அப்படியே அரசனுடைய ஸேனைகளால் சுடப்பட்டு, இறந்து விட்டது.

இவ்விதம் வேட்டையாடப்போன அரசனுடைய கதியாகிவிட் டது. இதை அறிந்தவுடன் அயோத்யா நகரத்தில் எங்கும் ஒரு பரபரப்பு ஏற்பட்டு விட்டது. மந்திரிகளும் இதை அறிந்து மிகுந்த துக்கத்துடன் ஸிம்மத்தால் ராஜன் அடிபட்டு கிடக்கும் இடத் திற்கு வந்து ராஜனுக்கு ஸத்கதி கிடைக்கும்படி சாஸ்த்

ரோக்தமான ஸம்ஸ்காரங்களை, ராஜனுடைய பட்டமஹிஷியான மனோரமையினிடம் பிறந்த ஸுதர்சனன் மூலம் செய்வித்தார்கள். அந்த ராஜகுலத்திற்கு வஸிஷ்டர் புரோஹிதரானதினால், மேல்கார்யங்களெல்லாம் ரொம்பவும் அழகாக நடைபெற்றன. பிறகு ப்ரதானமான மந்த்ரிகளும், வஸிஷ்டர் முதலான புரோஹித வர்க்கங்களும, ஒரு ஸபைகூடி, ப்ரஜைகளுடன் சேர்த்து ஆலோசித்து பட்டமஹிஷியினுடைய பிள்ளையான ஸுதர்சனனுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்கிறது என்று தீர்மானம் செய்தார்கள்.

இந்த வ்ருத்தாந்தத்தை ராஜனுடைய இரண்டாவது மனைவியான லீலாவதியின் தகப்பனும் உஜ்ஜயினீ என்ற நகரத்திற்கு அரசனும் உள்ள யுதாஜித் என்ற ராஜனானவன் தனது பேரனை சத்ருஜித்திற்குத் தான், ராஜ்யாபிஷேகம் செய்துவைக்கவேண்டும் என்ற துராக்ரஹத்துடன், தனது மாப்பிள்ளையான த்ருவஸந்தி மஹாராஜா மறித்துவிட்டான் என்றதைக்கேட்ட க்ஷணத்திலேயே துக்கத்துடனும், தனது ஸைன்யங்களை யழைத்துக்கொண்டு அயோத்யா நகரத்திற்கு வந்து சேர்ந்தான்.

அதே ஸமயத்தில் மனோரமை என்ற ராஜனுடைய பட்டமஹிஷிக்குத் தகப்பனும் களிங்க தேசத்திற்கு அரசனுமுள்ள வீரஸேனன் என்ற ராஜாவும், தன் மாப்பிள்ளையான த்ருவஸந்தி என்ற மஹாராஜன் மறித்து விட்டான் என்றதைக்கேட்டவுடன், தன் பேரனை ஸுதர்சனனுக்குத் தான் ராஜ்யபட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தானும், தனது ஸைன்யங்களுடன் அயோத்யா நகரத்திற்கு வந்து சேர்ந்தான். வீரஸேனனுடைய ஸைன்யங்களாலும், யுதாஜித்தின் ஸைன்யங்களாலும், அயோத்யா நகரம் முழுமையும் நிரம்பப்பட்டதாக ஆகிவிட்டது.

மந்திரிகளும், புரோஹிதர்களும், ஸுதர்சனனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்கிறது என்ற தீர்மானத்திற்கு ஒரு கலக்கமும் ஏற்பட்டுவிட்டது.

வீரஸேனன் என்ற அரசனனவன் தன் பெண்ணை மனோரமை, காலஞ்சென்ற த்ருவஸந்தி என்ற மஹாராஜாவிற்கு, பட்ட மஹிஷியானதினுல், அவளுக்குப் பிறந்த தன் பேரனுன ஸுதர்சனன் தான், ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு அர்ஹனுகிறபடியால் ஸுதர்சனனுக்குத் தான் அபிஷேகம் செய்யவேண்டும் என்று வாதம் செய்தான். யுதாஜித் என்ற அரசனே, தன் பெண்ணை லீலாவதி என்றவள், காலமடைந்த மஹாராஜனுடைய இரண்டாவது மனைவியாக ஆனாலும், அவளிடத்தில் பிறந்த, தன் பேரனுன சத்ருஜித் தான் குணங்களிலோ, வித்யையிலோ, லக்ஷணத்திலோ, மேலானவனுக இருப்பதினுல், சத்ருஜித்திற்குத் தான் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்யவேண்டுமென்று வாதம் செய்தான்.

இவ்விதம் இந்த இரண்டு அரசர்களுக்கும் கலஹமானது வ்ருத்தியாகி பெரிய போர் ஏற்பட்டுவிட்டது. யுதாஜித் என்றவன் பலிஷ்டனுனதினுல், வீரசேஸனனைக் கொன்றுவிட்டு தான் ஜயத்தை அடைந்துவிட்டான். அதனுல் மனோரமை என்ற பட்ட மஹிஷிக்கு ஒரு விதமான கதியும் இல்லாமல் ஆகிவிட்டது. தன் பர்த்தாவான த்ருவஸந்தியும் ஸிம்மத்தால் அடிபட்டு முன்பே மறித்துவிட்டான். தகப்பனுரான வீரஸேனனே யுதாஜித்துடன் யுத்தம் செய்து இறந்துவிட்டான். ஸுதர்சனன் என்ற குழந்தைக்கோ வயது மூன்று கூட ஆகவில்லை. இந்த மனோரமையினிடத்தில் லீலாவதிக்கும் முன்பு இல்லாமலிருந்த சக்களத்தி போராட்டமும் அளவற்றதாக ஏற்பட்டுவிட்டது. அந்த லீலாவதி

யினுடைய தகப்பனுமான யுதாஜித்தும், தான் ஜயித்துவிட்டோம் என்ற அஹங்காரத்தால் தன் பேரனுன சத்ருஜித்திற்கு ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்துவிட்டு ஸுதர்சனன் என்ற குழந்தையையும் கொன்றுவிடுகிறது என்ற தீர்மானத்தையும் செய்து விட்டான்.

இந்த வ்ருத்தாந்தங்களை யறிந்த மனோரமையோ இளம்பருவத்திலுள்ள ஒரு குழந்தையையும் வைத்துக்கொண்டு, "நான் எவ்விதம், இந்தக் கஷ்டத்திலிருந்து மீண்டு கொள்வது என்ற விசாரத்துடன் இருந்துவந்தாள். யுதாஜித் என்றவன் தன் குழந்தையைக் கொல்வதற்கு முந்தியே நான் நகரத்திற்கு வெளியில் எப்படிப் போக முடியும்? இந்தக் குழந்தையைத் தவிர எனக்கு வேறொரு நாதனும் இல்லையே! இந்தக் குழந்தையைத் தான் எப்படி ரக்ஷிக்கிறது? பேராசையாகிற லோபம் என்ற பிசாசு பிடித்துவிட்டால், அம்மனிதன் எந்த பாபம் தான் செய்யமாட்டான்.

लोभोऽतीवच पापिष्ठः तेनको नवशीकृतः।
किं नकुर्यात् तदाविष्टः पापं पार्थिवसत्तमः॥
पितरं मातरं भ्रातॄन्, गुरून् स्वजनबान्धवान्।
हन्तिलोभसमाविष्टः जनोनात्रविचारणा॥
अभक्ष्यभक्षणं लोभात् अगम्यागमनं तथा।
करोतिकिल तृष्णार्तः धर्मत्यागं तथापुनः॥

என்றோ நீதி சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதே! பணத் தாசையைப் போல் மஹாபாபி வேறொருவனும் இல்லை. அந்தப் பேராசைக்கு உட்படாத மனிதனும் உலகத்தில் ஒருவனும் இல்லையே! அவ்விதம் பேராசை பிடித்தவன் எந்த பாபத்தையும்

துணிந்து செய்வான். தாய், தந்தை, ஸஹோதரர்கள், தத்வோபதேசம் செய்த குருக்கள், இவர்களைக்கூட பணத்தாசை பிடித்தவன் கொன்றுவிடுவான். பணத்தாசை பிடித்தவன் சாப்பிடக்கூடாத தான மத்ய மாம்ஸாதிகளைக்கூட சாப்பிடத்துணிந்து விடுவான். பணத்திற்காக போகக் கூடாத இடங்களுக்கும் போய்விடுவான். ஐயோ! நான் என்ன செய்வேன் யுதாஜித்திற்கோ! ராஜ்ய லோபம் என்ற பிசாசு பிடித்து விட்டதே. என் குழந்தையை கட்டாயம் கொன்றே விடுவான். எனக்கோ ஒருவரும் ஸஹாயமில்லையே! நான் என்ன செய்வேன், என்று துக்கஸாகரத்தில் அந்த மனோரமையானவள், முழுகித் தப்பித்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த ராஜாங்கத்தில் அநேக நாளாக மந்த்ரியாக இருந்துவந்த விதல்லன் என்ற ஒரு வயது முதிர்ந்த மந்த்ரி மாத்ரம் இவளுடைய சார்பாக இருந்துகொண்டு இவளுக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்று கருதினன். அந்த விதல்லனை இந்த மனோரமையும் கூப்பிட்டு யுதாஜித்திற்கு பலியாகாமல், ஸுதர்சனன் என்ற குழந்தையைக் காப்பாற்ற என்ன உபாயம் என்று கேட்டாள். சக்களத்தியான லீலாவதிக்கு ஒரு அபிவ்ருத்தி ஏற்பட்டிருக்கும பொழுது, என் குழந்தையான ஸுதர்சனன் இங்கிருந்தால் பிழைப்பது துர்லபம் தான் என்று மனோரமை நிச்சயம் செய்து விட்டாள்.

விதல்லனும் மனோரமையைப்பார்த்து "மஹாராக்ஞீ! நீ கவலையை அடையவேண்டாம். லீலாவதியினிடம் போய் தகப்பனுரான யுதாஜித்தைப் பார்த்து என்னுடைய குறையைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்று நீ சொன்னுயேயானுல், லீலாவதியும் 'ஸரி' என்று அநுமோதித்து, ரதத்தைக் கொண்டுவரும்படி செய்வாள். அதில் நானும் உன்னுடன், ரதத்தில் ஏறிக்கொண்டு வருகிறேன்.

யுதாஜித்தைப் பார்த்துக் குழந்தையை அவனிடம் ஒப்புவிக்கிறது. என்ற வார்த்தையை பஹிரங்கப்படுத்திவிட்டு, ராஜ்யத்திற்கு வெளியில் எப்படியாவது போய் விடுவோம். கங்காதீரம் சென்று அங்கு எங்கேயாவது மஹான்களை அண்டி ஜீவித்து வரலாம்," என்று சொன்னான், மனோரமையும் அவ்விதமே ஸம்மதித்து, லீலாவதியிடம் போய் சொல்லி, லீலாவதியால் அநுப்பப்பட்ட ரதத்தில் ஏறிக்கொண்டு ராஜ்யத்திற்கு வெளியில் வந்துவிட்டாள். அந்த ரதத்தில் மனோரமையுடன்கூட அவளுடைய சேடிகளும் சிலர்களும் விதல்லன் என்ற மந்த்ரியும், மனோரமையின் சார்பாகவே சேர்ந்து கொண்டு, வெளியில் வந்து விட்டார்கள்.

இவ்விதம் இவர்கள் தந்த்ரமாக காசி தேசத்திற்கு புறப்பட்டு வரும்பொழுது நடுமார்க்கத்தில் சில திருடர்களால் இந்த ரதமும் அபஹரிக்கப்பட்டு, மனோரமையினுடைய நகைகளும், அபஹரிக்கப் பட்டு, மனோரமை ரொம்பவும் கஷ்டமான தசையில் வைக்கப்பட்டாள். அப்பொழுதும், விதல்லன் என்ற மந்த்ரியும் அவளுடைய சேடிகளும் அவளை அநுஸரித்து வந்தார்கள். மனோரமையும், பரம துக்கத்துடன், ஸுதர்சனன் என்ற குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு, கால் நடையாக வெகுதூரம் நடந்து, பரத்வாஜ மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற் கருகில் வந்தாள். அந்த ஆச்ரமத்திற்குள் அநேக மஹர்ஷிகள் இருக்கிறதைப் பார்த்துவிட்டு, ஆச்ரமத்திற்குள் நுழைந்து, குழந்தையைக் கையில் தூக்கிக்கொண்டு, பரத்வாஜ மஹர்ஷிக்கு ப்ரதக்ஷிண, நமஸ்காரம் செய்துவிட்டு, வணக்கத்துடன் அவர் முன்பாக நின்று வந்தாள்.

பரத்வாஜ மஹர்ஷியும் கருணையுடன், இவள் யாரோ மஹா ராஜனுடைய மனைவி போல் தோன்றுகிறதே இவளுடைய கையி

விருக்கும் குழந்தையோ, ராஜலக்ஷணங்களோடு கூடினதாய் இருக்கிறதே! இந்தக் காட்டில் வந்ததற்குக் காரணமென்ன என்ற கவலையுடன் "அம்மா நீயார்?" என்று கேட்டார். மனோரமையும் தன்னுடன் வந்திருக்கும், விதல்லன் என்ற மந்த்ரியைக்கொண்டு தன் வ்ருத்தாந்தங்களைச் சொல்லும்படி செய்தாள். பரத்வாஜ மஹர்ஷியும், மனோரமையினுடைய ஸகல வ்ருத்தாந்தங்களையும் தெரிந்து கொண்ட பிறகு, கருணையுடன் தன் ஆச்ரமத்திலேயே வஸிக்கும்படி கட்டளையிட்டார். மனோரமையும், தன் குழந்தையுடன் பரத்வாஜா ச்ரமத்தில் வஸித்துவந்தாள். அவளுடைய சேடிகளும் விதல்லன் என்ற மந்த்ரியும் அங்கேயே வஸித்தார்கள்.

இந்த தருணத்தில் அயோத்யா நகரத்தில் யுதாஜித்தினுடைய பேரனை, சத்ருஜித்திற்கு ராஜ்ய பட்டாபிஷேகம் நடந்து, சத்ருஜித்தானவன் ராஜ்ய பாரத்தை வஹித்து வருகிறான். யுதாஜித் என்ற சத்ருஜித்தின் மாதாமஹனே தன் பேரனை சத்ருஜித்திற்கு ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்துவிட்டு, ஸுதர்சனன் என்ற குழந்தையுடன் மனோரமை எங்கு வஸிக்கிறாள்? என்று தேட சாரர்களை ஏவினான். அங்காங்கு தேடி பரத்வாஜா ச்ரமத்தில் இருந்து வருகிறார்கள் என்றதையும் தெரிந்துகொண்டு, பரத்வாஜாச்ரமத்திற்கு வந்து ஸுதர்சனனைக் கொன்றுவிடுகிறது என்று தீர்மானித்தான். தீர்மானித்தவுடன் தனது ஸைன்யங்களோடு ச்ருங்கிபேரபுரம் என்ற வேடர்களுடைய ராஜ்யத்திற்கு அரசனை துர்தர்சன் என்ற அரசனைத் தனக்கு ஸஹாயமாகச் செய்துகொண்டு, பரத்வாஜாச்ரமம் வந்து சேர்ந்தான். மனோரமையும் இந்த யுதாஜித்தை அங்கு கண்டு நடுநடுங்கி மஹர்ஷியினிடம் வந்து நின்று கொண்டு "மஹர்ஷே! இங்கேயும் என் சத்ரு என் குழந்தையைக் கொல்ல வந்துவிட்டான்" என்று கதறினாள்.

மஹர்ஷியும் அதைக்கேட்டுக் கருணையுடன், "அம்மா! நீ பயப் படவேண்டாம். யுதாஜித்தை ஆச்ரமத்திற்கு அருகிலேயே வாரமல் செய்து விடுகிறேன்." என்று சொல்லிவிட்டு, தானே ஆச்ர மத்திற்கு வெளியில் எழுந்திருந்து போய் யுதாஜித்தைத் திரும்பி ஊர் போகும்படி செய்துவிட்டார். பிறகும், பரத்வாஜாச்ரமத்தில் அநேக நாள் மனோரமையானவள் வஸித்து வந்தாள். ஸுதர்சனன் என்ற குழந்தையும், மஹர்ஷிகளுடைய, குழந்தைகளுடன், விளை யாடிக்கொண்டு, தினந்தோறும் காலத்தை நயனம் செய்துகொண்டு வந்தது. ஒரு தினம் இந்த ஸுதர்சனன் மஹர்ஷியினுடைய குழந் தைகளுடன் விளையாடிக்கொண்டு இருக்கும் ஸந்தர்பத்தில், விதல் லன் என்ற மந்த்ரி அங்குவந்து சேர்ந்தான். அந்த மந்த்ரியோ இயற்கையிலேயே நபும்ஸகன். (அலி-ஆணுமல்ல, பெண்ணுமல்ல) அந்தப்புரத்தில் சென்று ஸுலபமாக ஸஞ்சாரம் செய்கிற மந்த்ரி கள் நபும்ஸகர்களாகத் தான் இருப்பார்கள்! ஸம்ஸ்க்ருத பாஷையில் क्लीबः (க்லீப:) என்று நபும்ஸகனுக்கு பெயர் உண்டு. ரிஷி குமாரர் கள் விதல்லனைக் கண்டவுடன், க்லீபன் வந்துவிட்டான் என்று சொன்னார்கள். ஸுதர்சனன் என்ற குழந்தையின் காதில் ब என்ற எழுத்துக் கேட்காமல் क्ली என்ற எழுத்து மாத்ரம் கேட்டதும் குழந்தைப் பருவமானதினால் விதல்லனைக் கண்டபொழுதெல்லாம் இந்த ஸுதர்சனன் "க்லீ" "க்லீ" என்று சொல்வான்.

அவ்விதம் சொல்லிச்சொல்லி "க்லீ" "க்லீ" என்ற சப்தத்தை எப்பொழுதுமே சொல்ல ஆரம்பித்துவிட்டான். அந்த "க்லீ" என்ற எழுத்தில் ஒரு அநுஸ்வரத்தைச் சேர்த்தால் (क्लीम्) என்று ஆகிவிடுகிறது. அது காமராஜ பீஜாக்ஷரம் என்று சாஸ்த்ரங் களில் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய மந்த்ரங்களுள்

இது ரொம்ப முக்யமான மந்த்ரமாகும். இந்த ஸுதர்சனன் என்ற குழந்தையானவன் அநுஸ்வரத்தை விட்டுவிட்டு, க்லீ (க்லீ) என்றதை மாத்ரம் சொல்லிக்கொண்டு வந்தாலும், அதனாலேயே உலகத்திற்குத் தாயாரான பராசக்தியானவள் பரம த்ருப்தியை யடைந்து அந்தக் குழந்தையான ஸுதர்சனனுக்குத் தன் ஸ்வரூபத்தை தர்சனம் கொடுத்தாள். கருட வாஹனத்தின் மேல் ஏறிக்கொண்டு எட்டு விதமான கைகளோடு ஸகல விதமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டதான தன்னுடைய ஸ்வரூபத்தை ஸுதர்சனன் என்ற குழந்தைக்கு அம்பாள் தர்சனம் கொடுத்து அநுக்ரஹம் செய்தாள். அத்துடன் அந்த ஸுதர்சனனுக்கு திவ்யமான ஒரு கவசமும், ஒரு வில்லும் அநேக விதமான பாணங்களால் நிறைக்கப்பட்ட இரண்டு அம்பராத்தூணிகளும் பரிசாகக்கொடுத்து, கருணைகடாக்ஷத்தால் குழந்தையைப் பார்த்தாள். அடிக்கடி இவ்விதம் அம்பாள் இந்த ஸுதர்சனனுக்கு தர்சனம் கொடுத்துக்கொண்டே இருந்தாள்.

ஸுதர்சனனும் அதுமுதல் பரம ஸந்தோஷத்துடன் அந்த "க்லீ" என்ற பீஜாக்ஷரத்தை எப்பொழுதும் ஜபம் செய்துகொண்டேவந்தான். பரத்வாஜ மஹர்ஷியும், ஸுதர்சனனுக்கு 11-வது வயது வந்தவுடன் உபநயனம் செய்து வைத்து, ஸகல வேதவேதாங்கங்களையும் தனுர்வேத ரஹஸ்யங்களையும், அர்த்த சாஸ்த்ரங்களையும் கற்றுக்கொடுத்தார். அம்பிகையினுடைய கடாக்ஷத்திற்கு பாத்ரமான இந்த குழந்தைக்கு ஸரஸ்வதீ கடாக்ஷம் ஏற்படக் கேழ்க்க வேண்டுமோ? எல்லா கல்வியிலும் சிறந்த பாண்டித்யத்துடன் கூடியதாக இக்குழந்தை ஆகிவிட்டது. அந்த ஸமயத்தில் ச்ருங்கிபேரபுரம் என்ற நகரத்திற்கு அரசனான வேடராஜனானவன் இந்தக்

குழந்தையைக் கொல்ல, யுதாஜித்திற்குத் தான் ஸஹாயமாக வந்த பாபத்தை நிவ்ருத்தி செய்து கொள்வதற்காக இக்குழந்தையினுடைய பெருமையை இவ்விதம் தெரிந்து கொண்ட பிற்பாடு, 8 குதிரைகளால் அலங்கரிக்கப்பட்ட திவ்யமான ஒரு ரதத்தை அக்குழந்தைக்குப் பரிசளித்தான். இந்த ஸுதர்சனனுனவன் அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு, அம்பிகையினுல் அனுக்ரஹபுரஸ்ஸரமாகக் கொடுக்கப்பட்ட கவசத்தையும் தரித்துக்கொண்டு, அம்பிகையினுடைய வில்லேயும் கையில் வைத்துக்கொண்டு, அம்பராத்தூணிகளே போட்டுக்கொண்டு பாரத்வாஜாச்ரமத்திற்கு அருகில் அங்காங்கு ஸஞ்சாரம் செய்யும் பொழுது, பார்க்கிற மஹர்ஷிகளுக்கு இந்த ஸுதர்சனன் தனியாகப் போகிறதாகத் தோன்றுகிறதில்லே அளவிடமுடியாததான அநேக ஸேனேகளால் சூழப்பட்ட ஒரு அரசன் போகுவது போல்தான் தோன்றும். அதுவும் அம்பாளுடைய ப்ரஸாதம் தான். இவ்விதமான மஹிமைகளே அந்த ஸுதர்சனனிடம் கண்ட மஹர்ஷிகள் ஒரு நாள் ஸுதர்சனனேப் பார்த்து, "அப்பா! குழந்தாய்! நீ மஹாபாக்யவான் அம்பாளுடைய ப்ரஸாதம் உன்னிடம் பரிபூர்ணமாய் இருந்து வருகிறது. நீ அதிசீக்ரமாக அயோத்யா ராஜ்யத்தில் அரசனுக ஆகப்போகிருய்." என்று ஆசீர்வாதம் செய்தார்கள். ஸுதர்சனனின் தாயாரான மனேரமையினிடமும், "அம்மணீ! நீ இனி வ்யஸனத்தை விட்டு விடலாம். உன் புத்ரனுக்கு ஸமானமான பாக்யவான் உலகத்தில் யாரும்இல்லே. உலகத்திற்குத் தாயாரான பராசக்தியின் கடாக்ஷவீக்ஷணம் உன் புத்ரனிடத்தில் பூர்ணமாக ஏற்பட்டு விட்டது. இனியாதொரு குறைவும் இல்லே. உன் புத்ரன் கூடிய சீக்ரம் அரசனுக வந்து விடுவான்" என்றும் சொன்னுர்கள் மனேரமையும் அதைக்கேட்டு, "தங்கள் ஆசீர்வாதத்தால் எல்லாம் ஏற்படும்," என்று சொன்னுள்.

(தொடரும்)

 Regd No. M. 2970.


வியாபாரிகளே! தொழிலாளிகளே!!

உங்களுடைய வியாபாரம் விருத்தியடைய வேண்டுமென்று எண்ணுகிறீர்களா? அவ்விதமானால், உடனே "ஸன்மார்க்க ப்ரதர்சினீ" பத்திரிகையில் விளம்பரம் செய்யுங்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பார்வையில் உங்கள் விளம்பரம் போகும். நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

## விளம்பர விகிதம்.

(இப்மிகக்குறைந்த கட்டணம் 1934 வரு நவம்பர் மீ 31 உக்குள் விளம்பரம் கொடுப்பவர்களுக்கு மட்டும்தான்.

| | ரூ. அ. ப |
|---|---|
| முழுப்பக்கம், அட்டை 2, 3ம் பக்கங்களில், 12 தடவைகளுக்கு | 30—0—0 |
| ½ பக்கம் ... ... ... | 15—0—0 |
| முழுப்பக்கம் அட்டை 4ம் பக்கம் 12 தடவைகளுக்கு | 40—0—0 |
| ½ பக்கம் ... ... ... | 25—0—0 |
| முழுப்பக்கம் (அட்டைகளைத்தவிர மற்ற பக்கங்களில்) 12 தடவைகளுக்கு | 25—0—0 |
| ½ பக்கம் ... ... ... | 12—8—0 |
| முழுப்பக்கம் (உள்பக்கம்) 1 தடவைக்கு | 2—8—0 |
| ½ பக்கம் ... ... ... | 1—8—0 |
| 1" அங்குலத்திற்கு 1 தடவைக்கு | 0—8—0 |

(6 தடவைக்கு இவ்விகிதம் பெருக்கிக்கொள்ளவேண்டியது.)

மற்ற விபரங்களும், விளம்பரமாட்டரையும் கீழ் விலாஸத்திற்கு அனுப்பவும்.

மானேஜர்,

**ஸன்மார்க்க ப்ரதர்சினீ,**

**396,** வடக்குமாசி வீதி, மதுரை.

N. B விளம்பரம் செய்வது மானேஜரின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது.


Printed at the Rajeswari Press, Palace Road, Madura:-1934.